www.tamilarangam.net


# களத்தில்



தமிழீழ மக்களாகிய நாம் ஒரு தேசிய இனக்கட்டமைப்பைக் கொண்டவர்கள். பழம்பெரும் மொழியும், பண்பாடும், பாரம்பரிய தாயகமும், பழமை மிக்க வரலாறும் கொண்ட ஒரு தனித்துவ தேசமாக நாம் வாழ்ந்து வருகின்றோம். இந்தத் தமிழர் தேசத்தையே தமிழீழம் என அழைக்கின்றோம்.

*தமிழீழத் தேசியத் தலைவர்*
*மேதகு வே. பிரபாகரன் அவர்கள்*

(25.02.1999) தாயகத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கிவரும் செய்தித்தாள் (180) அன்பளிப்பு : 60 p



# விட்டுக்கொடுக்கப்பட முடியாதது !

தமிழீழத்தின் விடுதலையும், பாதுகாப்பும் நமது கடற்பரப்பை நாம் வெற்றி கொண்டு காப்பதில் தங்கியுள்ளது.

தரைப்போரில் எம் போராணிகளை வெற்றிகொள்ள முடியாத எதிரி அரசு எமது கடற் பரப்பை வெற்றிகொண்டு ஆக்கிரமிப்பதன் மூலம் போரை தமக்குச் சாதகமாக திருப்ப முயல்கின்றது. சிங்களம் தனது கடற்பலத்திற்கே இப்பொழுது முன்னுரிமை கொடுத்துள்ளது என கொழும்பு ராணுவ ஆய்வாளர்கள் பகிரங்கமாக ஒப்புக் கொண்டுள்ளனர்.

தமது கடற்படையின் வீச்சையும், சுடுகல ஆற்றலையும் அதிகரிப்பதற்காக புதிய ஆயுதக் கொள்வனவுகளில் சிங்கள அரசு ஈடுபட்டுள்ளது. இஸ்ரேலில் நவீன கடற்படை தளபாடங்களைக் கொள்வனவு செய்வதற்காக கடற்படை உயர்மட்டக் குழு அங்கு சென்றுள்ளதாக சிறிலங்காவின் ‘சன்டே ரைம்’ பத்திரிகை கூறுகிறது.

போர்முறைப் பரிணாமத்தை எதிர்கொள்ள தமிழர் கடற்படை அணிகளான ‘கடற்புலிகள்’ தம் ஆற்றலை வலுப்படுத்தி வருகின்றனர். எமது தேசியத் தலைவரின் வழிகாட்டலில் கடற் புலிகள் தனித்துவமான பலமான பயிற்றுவிக்கப்பட்ட கடற்படையாக உருவாகி வருகின்றது.

எதிரியின் நவீன டோராப் பீரங்கிப் படகுகளையும் கனரக யுத்தக் கலங்களுக்கும் ஈடு கொடுத்து எமது கடற்பரப்பில் பல மணி நேரச் சமரை நடாத்தும் போராற்றலை கடற்புலிகள் ஈட்டிவருகின்றனர்


தமிழீழ விடுதலைப் போரில் எதிர்கால வெற்றிக்கும் பாதுகாப்பிற்குமான கடற் புலிகளின் பலத்தை கட்டி எழுப்பும் பணி தொடர்ச்சியானதும் விட்டுக் கொடுக்கப்பட முடியாததுமாகும்.

**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# தேர்தல் அல்ல துண்டாடல் முயற்சி

எங்கள் உயிரிலும் மேலான தேசம் எங்கள் தமிழீழத் தாயகம். நாம் எங்கிருந்தாலும் எப்படியிருந்தாலும் எங்கள் இரத்த அணுக்களில் எங்கள் சுவாசக்காற்றில் எங்கள் ஆன்மாவில் இரண்டறக் கலந்து நிற்பது எங்கள் தமிழீழத் தேசத்தின் அழகுத் திருமேனியில் நாம் தவழ்ந்து நடந்து ஓடி மகிழ்ந்து ஆடிப்பாடி வாழ்ந்த அந்த இனிய நாட்கள். அந்த எங்கள் இனிய தேசத்திலிருந்து சிங்கள அரச பயங்கரவாதத்தாலும் அதன் விளைவான சிறிலங்கா இராணுவ ஆக்கிரமிப்பாலும் நாம் அரசியல் அகதிகளாக அரசியல் தஞ்சம் கோரி இன்று நாம் புலம்பெயர் தமிழீழ மக்களாக உலகெல்லாம் வாழ்ந்தாலும் எங்களுக்கும் எங்கள் பிள்ளைகளுக்கும் அடையாளத்தை தருவது தரப்போவது எங்கள் தமிழீழத் தேசமே. இவ்வாறாக எங்கள் வாழ்வின் எங்கள் குழந்தைகளின் வாழ்வின் மையமாகத் திகழும் எங்கள் தமிழீழத் தேசத்தை துண்டு துண்டாக்கி அங்குள்ள எங்கள் சனத்தொகை அடர்த்தியை மாற்றியமைத்து எமக்கென ஒரு நாடு இல்லை என உலகுக்கு காட்ட முயல்வது காலனித்துவ விலகலின் பின்வந்த சிங்களப் பெரும்பான்மை அரசாங்கங்களின் பொது அரசியல் செயல் திட்டம்.

இதன் முதல் விளைவாக அரச ஆதரவுடனான சிங்களக் குடியேற்றத்திட்டங்கள் தென் தமிழீழத்தில் காலனித்துவ விலகல் முதல் இன்று வரை தொடர் திட்டங்களாக செயற்படுத்தப்பட்டு வருகின்றன. இதனால் எமது தென் தமிழீழத்தின் சனத்தொகையில் குறிப்பிடத் தக்க அளவு சிங்களவர்களை வலிந்து புகுத்தியுள்ள சிறிலங்கா அவர்களின் வாக்குப்பலத்தைக் கொண்டு தென்தமிழீழத்தை சிங்களப் பூமியென அடாவடித்தனமான கருத்தொன்றை எப்பொழுதுமே முன்வைத்து இந்தக் கருத்திற்கு சட்ட அந்தஸ்து கொடுப்பதற்கு காலத்துக்கு காலம் படாதபாடுபட்டு வருகிறது. இந்த அடாவடித்தனமே தமிழர் பிரச்சினையின் மூலக்காரணம் என்பது தமிழர் பிரச்சினை பற்றி அறிந்த அனைவரும் அறிந்த உண்மை. இதனாலேயே இந்திய—சிறிலங்கா ஒப்பந்தத்தில் வடக்கு கிழக்கு மாகாணங்கள் ஒரு தனியலகாக இரு நாடுகளாலும் பிரகடனம் செய்யப்பட்டது.

அக்காலம் முதல் சிறிலங்கா அரசாங்கத்தின் நோக்கும் போக்கும் எப்படியாவது வடக்கு கிழக்கு மாகாணங்களைத் தனித் தனி அலகுகளாக துண்டாட வேண்டுமென்பதாகும். இந்த நோக்குக்கு அனுசரணையாக இந்திய சிறிலங்கா ஒப்பந்தத்தால் உருவாக்கப்பட்ட உருப்படியான அதிகாரங்களற்ற பொம்மை சபையான வடக்கு கிழக்கு மாகாண சபையின் முதலமைச்சராக இருந்த வரதராஜ பெருமாள் தன்னிச்சையான ஆனால் எவ்வித வலுவும் அற்ற தமிழீழப் பிரகடனம் ஒன்றைச் செய்து அதனை சாட்டாக வைத்து இந்த வடக்கு கிழக்கு மாகாணசபையின் மேல் சிறிலங்கா அரசாங்கத்தின் நேரடி ஆட்சி தோன்ற வழிவகுத்தார். சிறிலங்காவால் நியமிக்கப்பட்ட வடக்கு கிழக்கு மாகாணசபை ஆளுநர்களுடன் இயங்கி வரும் இப் பொம்மை மகாணசபைக்கு தேர்தல் ஒன்றை நடாத்துவதன் மூலம் அதனை மக்களின் விருப்பில் இயங்கும் ஜனநாயக அமைப்பு போன்ற மாயை ஒன்றை உருவாக்க சிறிலங்காவின் மாயா ஜால ஜனாதிபதி சந்திரிகா தற்பொழுது முழு முயற்சியில் இறங்கியுள்ளார்.

சிங்கள பௌத்த பேரினவாதத்தைக் மூண்டெழ வைப்பதன் மூலம் இன்று தென்னிலங்கையில் தனக்கு ஏற்பட்டு வரும் தீர்க்க முடியா அரசியல் நெருக்கடிகளைத் திசை திருப்பும் திட்டமாக சந்திரிகா வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கான மகாணசபைத் தேர்தல்களை நடாத்த முற்பட்டார். இந்நேரத்தில் ஒரு கல்லில் இரு மாங்காய் விழுத்தும் நோக்கில் வடக்கில் தேர்தல் நடத்துவதற்கான அமைதிநிலை இல்லை ஆதலால் வடக்கு கிழக்கு மாகாணசபையை இரு கூறாக்கி கிழக்கிற்கான தேர்தலை நடாத்தப் போவதாக ஒரு புதுக்கதை யளப்புடன் எங்கள் தாயகத்தை துண்டாடல் முயற்சிக்குத் தேர்தல் எனச் சந்திரிகா பெயரிட்டு மகிழ்கின்றார். ஆனால் இந்த முயற்சி வடக்கு கிழக்கைத் தனியலகாக பேண உறுதி பூண்டு இந்தியா செய்த ஒப்பந்தத்தினை மீறும் செயல் ஆதலால் இந்தியாவுக்கே இதனால் சிறிலங்கா அவமானம் செய்கின்றது என்பது யதார்த்த பூர்வமான உண்மை. இதனை சமாளிப்பதற்கு இந்தியாவில் பதுங்கி வாழும் வரதராஜபெருமாளையே அழைத்து அவரை மீளவும் கிழக்கின் முதலமைச்சராக்குவதாக வாக்களித்து தேர்தல் களத்தில் வேட்பாளராக நிறுத்த வைக்க சந்திரிகா கடும் முயற்சிகளை மேற்கொண்டார் எனக் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. சந்திரிகாவின் கிழக்குக்கான மாகாண சபைத் தேர்தல் என்பது எமது தேசத்தினை துண்டாட சந்திரிகா செய்யும் அரசியல் செயற்திட்டம் என்பதை எல்லாத் தமிழீழ மக்களும் தெளிவாக உணர்கின்றனர். ஆயினும் சிறிலங்காவின் இறைமையை ஆக்கிரமிப்பாக கருதும் தமிழீழ மக்கள் இதனையும் இராணுவப் பின்னணியில் சந்திரிகா அரசாங்கம் நடாத்தப் போகும் மற்றொரு ஆக்கிரமிப்பு நாடகமாகவே கருதுகின்றனர். ஆகவே தமிழீழ மக்கள் இதனை தமது விருப்பை வெளிப்படுத்துவதற்கான தேர்தலாகவோ அல்லது இம்மாகாண சபைகளைத் தமது ஆட்சியை அமைப்பதற்கான அரசியல் இயந்திரமாகவோ எதிர்பார்த்து தம்மை அரசியல் முட்டாள்களாக்கும் நிலையில் எந்தத் தமிழ் மகனும் மகளும் இல்லை.

இதற்கிடை சந்திரிகாவின் ஜனநாயகம் என்றால் என்ன என்பதை வயம்பாவில் சந்திரிகா நடத்திக் காட்டிய மகாணசபைத் தேர்தல் உலகு முழுவதற்கும் வெளிச்சம் போட்டுக்காட்டி விட்டது. சிறிலங்காவின் எதிர்க்கட்சித் தலைவரே நாட்டின் ஜனநாயகத்தைப் பாதுகாக்க தொகுதிக்க ஆயிரம் பேர் கொண்ட இராணுவம் ஒன்றை அமைக்கும்படி அறைகூவல் விடுத்துள்ளார். அவர் இதனை சாத்வீகவழியில் சந்திரிகா அரசாங்கத்தின் செயற்பாடுகளை எதிர்க்கப்போகும் அமைப்பு எனக் கூறிக் கொண்டாலும் அவர் மக்கள் இராணுவம் எனப் பெயரிட்டுள்ளமை சந்திரிகாவால் ஜனநாயக ஆட்சி முறை சிங்கள மக்களிடையிலும் சாகடிக்கப்பட்டு வருவதை தெளிவாக்கியுள்ளது. அதுமட்டுமல்ல சிங்களவர்களுக்கே அரசியல் அதிகார பரவலாக்கலை மறுக்கும் சந்திரிகா அரசாங்கம் தமிழ் மக்களுக்கு எவ்வாறு அரசியல் அதிகாரப் பரவலாக்கலை வழங்க கூடும். எனவே சந்திரிகா அரசாங்கத்தின் சமாதான கோஷங்கள் அத்தனையுமே வேஷங்கள் எனச் சிறிலங்காவின் எதிர்க்கட்சித் தலைவர் பகிரங்கமாகத் கருத்துக் கூறியுள்ளார்.

எல்லாவற்றுக்கும் மேலாக சிறிலங்காவின் கத்தோலிக்க திருச்சபையின் தலைமை ஆயர் நிக்கலஸ் மார்க்ஸ் பெர்னான்டோ நாட்டின் ஜனநாயகத்தை பாதுகாக்க மக்கள் திரண்டெழுமாறு விடுத்துள்ள அவசர வேண்டுகோள் சந்திரிகா அரசாங்கத்தின் ஜனநாயகப் போர்வையை கிழித்தெறிந்துள்ளது. சந்திரிகா தமிழ் மக்களால் மட்டுமல்ல சிங்கள மக்களாலும் அவரின் ஜனநாயக விரோத செயற்பாடுகளால் கிட்லரைவிட மோசமான நவீன சர்வாதிகாரியாக மதிக்கப்படுகின்றார். இந்த சர்வாதிகாரியினை விரட்டியடிக்க சிங்கள மக்கள் சக்தி திரண்டெழுவதைக் காணக்கூடியதாக உள்ளது.

இந்நிலையில் தமிழ் மக்கள் மீதான மற்றொரு இராணுவ ஆக்கிரமிப்பின் மூலம் பௌத்த சிங்கள பேரினவாதத்தை தட்டி எழுப்பி சிங்கள மக்களை திசை திருப்ப சந்திரிகா கிழக்கை சிங்களப் பூமியாக்கும் தேர்தல் துண்டாடலை முன்னெடுக்க அதே நேரத்தில் அவரின் புதிய இராணுவத் தளபதி சிங்களப் படைக்கு ஆட்சேர்க்கும் புதிய அறிவிப்புடன் சிங்களத்தேசம் எங்கும் ஓடித்திரிகின்றார். உடனடியாக களத்திற்கு அனுப்பமாட்டோம் பயிற்சி பெற்றதின் பின் விரும்பினாலே அனுப்புவோம் எனப் படையில் சேர மறுக்கும் சிங்கள மக்கள் முன் புதிய இராணுவத் தளபதி மன்றாட்டம் நடத்தி சந்திரிகாவின் இராணுவ ஆட்சிக்கு முண்டு கொடுக்க படாத பட்டு வருகின்றார். ஆனால் சொத்தி உபாலி போன்ற பயங்கரவாதிகளுக்கு வாகனம் வேண்ட சந்திரிகாவே நேரடிப் பிணை நின்றார் என்ற செய்திகள் சிங்கள மக்களிடை சந்திரிகாவின் சமாதானதேவதை வேஷத்தை கலைய வைத்து வருகிறது.

இவ்வாறு நானே எனக்கு பகையானேன். என் நாடகத்தில் நான் முடிவானேன் எனப்பாட்டுப்பாடும் நிலையில் தவிக்கும் சந்திரிகா தனது இறுதி ஆயுதமாக பௌத்த சிங்கள பேரினவாதத்தை கிளறி விட்டு தன் ஆட்சியைத் தக்கவைக்க எடுக்கும் இறுதி முயற்சியே கிழக்கை பிரிக்க நடாத்தும் தேர்தல் நாடகம். ஆயினும் சந்திரிகாவுக்கு ஒன்று தெளிவாகப் புரியும் தான் என்ன நாடகம் நடத்தினாலும் தமிழீழ விடுதலைப் புலிகள் என்னும் தமிழ் மக்களின் தேசிய விடுதலை இயக்கம் உள்ளவரை வடக்கு கிழக்கை பிரிப்பது என்பது பகற்கனவே என்பது. ஆனாலும் என்ன செய்வது தெற்கில் தனக்கு ஏற்பட்டுவிட்ட அரசியல் நெருக்கடியை திசைதிருப்ப மீளவும் கிழக்கை பிரிக்கும் அரசியல் விளையாட்டில் இறங்குகிறார் சந்திரிகா. இந்நேரத்தில் சந்திரிகாவின் தீய நோக்கையும் அதனால் ஏற்படக் கூடிய பாரதூரமான விளைவுகளையும் உலகிற்கு எடுத்து விளக்கி இது தேர்தல் அல்ல எமது தாயகத்தின் துண்டாடலுக்கான அரசியல் முயற்சி என்ற உண்மையை உலகறிய வைக்க புலம்பெயர் தமிழீழ மக்களாகிய நாமனைவரும் வேகமாகச் செயற்பட வேண்டிய நேரமிது.

◆◆◆

| AUSTRALIA | CANADA | DENMARK | FRANCE | GERMANY | ITALY |
|---|---|---|---|---|---|
| TCC<br>P O Box 375,<br>Preston,<br>Victoria 3072. | WTM<br>64 Eaton Avenue,<br>Toronto,<br>Ontario M4J 2Z5. | LTTE<br>P.O.Box 47,<br>7400 Herning. | TCC<br>341 Rue Des Pyrenees,<br>75020 Paris. | TCG<br>Postfach 340251,<br>51624 Gummersbach. | TCC<br>Via Mariano Stabile - 49,<br>90139 Palermo. |
| **NETHERLANDS** | **NORWAY** | **SWITZERLAND** | **SWEDEN** | **UNITED KINGDOM** | **U.S.A** |
| TCC<br>Grt. Hertoginnelaan-106,<br>2517 EL Den Hagg. | TCC<br>P.O.BOX 1699 Vika,<br>0110 Oslo. | WTTC<br>Joses Str - 110,<br>8005 Zurich. | TCC<br>Glomminge Grand-25,<br>3rd Floor,<br>16362 Spanga. | UTO<br>Eelam House,<br>202 Long Lane,<br>London SE1 4QB. | W.T.C.C<br>170-10 Cedarcroft Road<br>Suite 1-L, Jamaica<br>New York 11432. |



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






# ஜனநாயக விபச்சாரம்

**அன்று எங்கள் தமிழீழத் தேசத்தில் சந்திரிகா தேர்தல் நாடகம் ஆடிய பொழுது நாம் கூறியவற்றை கேட்க மறுத்த சிங்கள சமுகத் தொடர்பு சாதனங்கள் இன்று அழுகின்றன. நீதியென்பது எல்லோருக்கும் சமமான ஒன்று அதில் பக்கசார்பு காட்டி தமிழர்க்குத் தானே என்று மௌனம் சாதித்த சிங்களப் பத்திரிகைகள் இன்று பக்கம் பக்கமாக எழுதுகின்றன. ஆனால் நாம் ஒரு விடுதலை இயக்கம் என்ற வகையில் சிங்கள மக்களின் மீதான ஒடுக்குமுறை தொடர்பாக 'சண்டே லீடர்' பத்திரிகை பிரசுரித்த கட்டுரையை இங்கு தருகின்றோம்.**

சந்திரிகா குமாரதுங்கா இவ்வாரச் சிந்தனைக்கான பெண்ணாக இருக்கின்றார். ஐந்து வருடமாக ஆட்சி நடத்திய அவருடைய கட்சி வயம்ப மகாணசபையை வன்முறையைக் கட்டவிழ்த்து விட்டு பயமுறுத்தல்களையும் சண்டித்தனங்களையும் தாராளமாக செய்து கைப்பற்றியுள்ளது. சுயாதீனமான தேர்தல் அவதானிகளும் (எதிர்க்கட்சிக்கு அப்பாற்பட்டவர்கள்) சமுக தொடர்பு சாதனங்களும் இது எல்லாத் தேர்தல்களும் எப்படி நடக்கப்போகின்றது என்பதை எதிர்வு கூறும் தாய்த் தேர்தலாக அமைந்து விட்டது என விமர்சித்துள்ளனர். மக்கள் ஐக்கிய முன்னணியின் ஆட்டுத் தோலை உரித்தெறிந்து அது உண்மையில் ஒநாய் தான் என்பதை வெளிப்படுத்தியுள்ளது. இந்த தேர்தல்களை அங்கீகரித்து வெற்றிவிழாக் கொண்டாடியதன் மூலம் சந்திரிகா தனக்குத் தானே மண்ணையள்ளிப் போட்டுக் கொண்டுள்ளார். இந்த நேரம் முதல் சந்திரிகாவை ஒரு கொடுமைக்காரியாக - வில்லியாக மக்கள் கருதத் தொடங்கிவிட்டனர். அவரும் தனது கொடுமைத்தனங்களை மக்கள் மேல் அதிகரிப்பார் என்பதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. சிறிலங்காவில் மக்கள் இன்று சோர்வின் எல்லையில் வாழ்கின்றனர்.

வயம்பாவில் மக்களைச் சுதந்திரமாக வாக்களிக்க அனுமதிக்காததின் மூலம் மக்கள் ஐக்கிய முன்னணி மக்களுடைய வாக்குரிமையை வலுக்கட்டாயமாக செயலிழக்கச் செய்துள்ளது. குமாரதுங்கா பிறப்பதற்கு முன்பிருந்தே சிறிலங்காவில் ஜனநாயகம் வேரூன்றி நிற்கிறது. ஜனநாயகம் என்பது எங்களின் பிறப்புரிமை. இதனாலேயே நாம் வளம் பெற்றோம். இது பண்டாரநாயக்கா குடும்பத்தினதோ அல்லது ரத்வத்தை குடும்பத்தினதோ அல்லது விக்கிரமசிங்கி குடும்பத்தினதோ சொத்தல்ல. ஜனநாயகம் எங்கள் எல்லோரதும் உரிமை. அதற்கு எதிராகச் செயற்படுபவர்கள் யாராக இருந்தாலும் நாம் எமது சட்டபூர்வமான முழுச்சக்திகளையும் கொண்டு அதற்கு எதிராக போராட வேண்டும். மக்கள் ஐக்கிய முன்னணி தான் ஜனநாயகத்தை தூக்கியெறிந்து துக்கமான பாதையில் சென்ற முதலாவது கட்சியல்ல. சிலர் இதற்கு முன்னர் இக் கைங்கரியத்தில் சில காலத்திற்கு வெற்றி பெற்றுள்ளதை உலக வரலாற்றில் காணலாம். ஹிட்லர், மூசோலினி, மார்கோஸ் இப்படிச் சில பெயர்கள் உண்டு. இவர்கள் எல்லோருமே ஜனநாயக வழிகளில் ஆட்சிக்கு வந்து குழப்பங்களாலும் வன்முறைகளாலும் ஆட்சியில் இருந்து விரட்டப்பட்டவர்கள். இதிலிருந்து சந்திரிகா படிக்க வேண்டிய பாடங்கள் நிறைய உண்டு. அவரும் ஜனநாயகத்தை குழிதோண்டிப் புதைத்து வன்முறைகளை ஆட்சிமுறைமையாக இனியும் தொடர்வார் ஆனால் அவ்வன்முறையினாலேயே ஆட்சியிலிருந்து விரட்டியடிக்கப்படுவார். சந்திரிகாவின் தாயார் ஆட்சியினை உரியகாலத்தில் விட்டு விலகாது 1977 வரை இரண்டு ஆண்டுகளுக்கு ஆட்சியில் ஒட்டிக் கொண்டார். இந்த வன்முறைக்கு பரிசாக 7 ஆண்டு குடியுரிமைப் பறிப்பு வழங்கிய அவரின் பதவி எதிரியான ஜே.ஆர். ஜயவர்த்தனாவுக்கு அவர் நன்றியுடையவராக இருத்தல் வேண்டும். இதற்கு முன்னரும் 1964ல் பொதுத் தேர்தலில் மக்கள் அளித்த ஜனநாயகத் தீர்ப்பை ஏற்க மறுத்த அவரின் தாயார் சிறிமாவோ பண்டாரநாயக்கா டெம்பில் றீயை விட்டு வெளியேறாது ஒட்டிக்கொண்டு இருந்த சரித்திரங்களும் உண்டு. இவை எல்லாம் கெட்ட கனவாகப் போகட்டும். பண்டாரநாயக்கா குடும்பத்தினர் தோல்விகளை ஏற்று தானாக வெளியேறமாட்டார்கள். சப்பாத்துக் காலால் உதைத்து தள்ளினாலே வெளியேறுவார்கள் என்ற அவப்பெயர் அவர்கள் வரலாற்றில் நிலைபெற்று விடக் கூடாது என்பதே எமது பிரார்த்தனை.

நாம் முன்பும் சந்திரிகா எதற்கும் அஞ்சாத கெட்டித்தனத்துடன் தாராளமாகப் பொய்கூறும் பழக்கமுள்ளவர் எனப் பொறுப்புணர்வுடன் சுட்டிக்காட்டியுள்ளோம் அவருடைய குணம் உண்மை பேசாமை என்பது ஒருபுறமிருக்க பொய்யை தனது தேவைக்காகப் பயன்படுத்துபவர் என்பதே அவரைப் பற்றி முடிந்த முடிவாக ஒருவர் கூறக்கூடியதாக உள்ளது. அவருடைய உண்மையற்ற தன்மையை வெளிப்படுத்தும் தெட்டத் தெளிவான உதாரணங்கள் உண்டு. தேவை ஏற்படின் அவற்றை பட்டியல் போட்டுக் காட்ட நாம் தயங்க மாட்டோம். அவற்றில் ஒன்றை மட்டும் உதாரணத்திற்கு நாம் இப்போது எடுத்து நோக்குவோம்.



**துக்கமான உண்மை என்னவென்றால் மனிததன்மையற்ற செயல்பாடுகள் சிறிலங்காவின் அரசியல் சக்திகளுக்கு மட்டுமல்ல சிறிலங்காவின் ஜனாதிபதிக்கும் நிறைய உண்டு என்பதேயாகும்**

கடந்த வாரம் சுப்றீம் கோர்ட் சந்திரிகா கடந்த ஆகஸ்ட் மாதத்தில் மகாண சபைத் தேர்தல்களை ஒத்தி வைத்தமை அரசியல் அமைப்புச் சட்டத்திற்கு முரணானது எனத் தீர்ப்பளித்தது. அரசியல் அமைப்பை பேணிப் பாதுகாப்பேன் எனச் சத்தியப் பிரமாணம் செய்து பதவியேற்ற அவரே அரசியலமைப்புச் சட்டத்தை வன்முறைப்படுத்தியுள்ளார். அவரும் அவருடைய அரசாங்கமும் தேர்தலைப் பின்போட்டமைக்கு கூறிய ஆழமான சாட்டு தேசிய பாதுகாப்பின் மேல் கவனம் செலுத்தப்படவேண்டியிருந்ததினால் தேர்தலை நடாத்த நேரத்தை ஒதுக்கமுடியாதிருந்தது என்பது ஆகும். ஜெயசிக்குறுயினைப் பூர்த்தி செய்வதை, தேர்தல்களை நடாத்துவது குழப்பி விடும் என்பதே அப்பொழுது கூறப்பட்ட விளக்கம். ஆனால் சுப்றீம் கோர்ட் - தேர்தலை ஒத்திவைக்க வேண்டிய அளவுக்கு தேசிய பாதுகாப்புக்கு குந்தகம் விளைவிக்க கூடிய எந்த அச்சுறுத்தலையும் இனங்காண முடியவில்லை என- தீர்ப்பளித்துள்ளது. இவற்றை நடாத்துவதற்காக தாம் ஜயசிக்குறுயை கைவிட்டதாகஇன்னொரு பொய்யையும் சந்திரிகா கூசாது கூறியுள்ளார். யாழ்ப்பாணத்துக்கு அதிக வழங்கல்களை ஏற்படுத்த பாதையைத் திறத்தல் என்ற கனவுக்கு மூவாயிரத்துக்கு மேற்பட்ட உயிர்களைச் சந்திரிகா பலியிட்டுள்ளார். துக்கமான உண்மை என்னவென்றால் மனிததன்மையற்ற செயல்பாடுகள் சிறிலங்காவின் அரசியல் சக்திகளுக்கு மட்டுமல்ல . சிறிலங்காவின் ஜனாதிபதிக்கும் நிறைய உண்டு என்பதேயாகும். எண்ணிக்கையற்ற வன்முறைகளை எதிர்க்கட்சிகளின் மேல் சந்திரிகா அரசாங்கம் கட்டவிழ்த்து விட்டமை அதன் அதிகாரத் துஸ்பிரயோகங்கள் எல்லாவற்றுக்கும் சிகரமாக அமைந்தது. இந்த அதிகார துஸ்பிரயோகங்களில் எல்லாம் மிகமிக அருவருப்பான செயல் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவாளர் என இனங்காணப்பட்ட 53 வயது நிறைந்த பெண் ஒருவரை அவரின் பிள்ளைகள் முன்பாக துகிலுரிந்து துப்பாக்கி முனையில் சனநடமாட்டம் மிகுந்த தெருக்களில் நிர்வாணமாக நடத்திச் சென்றமையாகும். சுயாதீனமான மக்கள் தொடர்பு சாதனங்கள் இந்தக் கொடுமையை குறித்து தகுந்த ஆதாரங்களுடன் செய்திகள் வெளியிட்டும் பெண்ணுரிமை உரிமை பேசுபவர்கள் பலத்த கண்டனக் குரல் எழுப்பியும் இந்த காட்டுமிராண்டித்தனமான கொடுமைமிகு குற்றச் செயல் குறித்து சந்திரிகா ஒரு வார்த்தை கண்டனமாக கூட தெரிவிக்காமை எங்கள் நாகரீகம் கலாச்சாரம் என்பவற்றின் ஆணி வேரைப் பிடித்து உலுப்புகின்றது. குமாரதுங்காவும் தற்போது 53 வயதுடைய ஒரு தாயார். அவர் பதவியை விட்டு வெளியேறிய ஒரு காலத்தில் அவரின் பிள்ளைகளை யசோதா- விமுக்தி முன்பாக நிர்வாணமாக்கப்பட்டு காலி வீதியில் துப்பாக்கி முனையில் நடத்திச் செல்லப்பட்டால் அவர் எப்படியான மனோநிலையை அனுபவிப்பார்? (சிந்தனைக்காகத் தன்னிலும் இப்படி எழுத வேண்டி வந்ததை கடவுள் மன்னிப்பாராக). அவருடைய கட்சி ஆயுதபலத்தினால் இம்முறை தேர்தலில் வெற்றி பெற்றிருக்கலாம். ஆனால் இத்தகைய வெற்றிகள் எல்லாம் நிலையற்றவை என்பதை சந்திரிகா மனதில் கொள்ள வேண்டும். உலக அரசியலில் சர்வாதிகாரிகள் கொடுமைக்காரர்கள் எல்லாமே சோகமான முடிவுகளையே சந்தித்துள்ளனர். அவர்கள் விட்டு விலகும் பொழுது அவப்பெயர்களையே விட்டுச் செல்வது வழமை. சர்வாதிகாரத்தின் கதவு சாத்தப்பட்டதும் சர்வாதிகாரிகளின் அவப்பெயர்கள் மறைந்து விடுவதில்லை. பிரான்சியப் புரட்சியில் இருந்து இன்று வரை சர்வாதிகாரிகளின் அவப்பெயர்களை சுமக்கின்ற ஒரு சரித்திரமே உண்டு. இத்தகைய ஒரு

(தொடர்ச்சி 15ம் பக்கம்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# செம்மணிப் புதைகுழியும் கதிர்காமரின் பொய்யும்

**நாதன்**

செம்மணிப் புதைகுழிகளை எதிர்வரும் மார்ச் 05ம் திகதி 'தோண்ட' உள்ளதாகவும், அதனைப் பார்வையிட அனைத்துலக மனித உரிமைகள் அமைப்புக்களை அழைப்பதாகவும் சிறிலங்கா வெளிவிவகார அமைச்சும், இராணுவப் பேச்சாளரும் கடந்த 11.02.1999 அன்று திடீர் அறிவிப்பொன்றை விடுத்தனர்.

இவ் அறிவிப்பானது தென்னாசியாவின் முன்னணி பத்திரிகைகளின் விறுவிறுப்புச் செய்தியாக வெளியிடப்பட்டன. குற்றம் செய்யும் இராணுவத்தினரை தமது அரசு தண்டித்துள்ளது என்ற உரிமைகோரலே. இவ் அறிவிப்பின் பின்னால் கதிர்காமரால் வகுக்கப்பட்டிருந்த இராஜதந்திரமாகும்.



ஆனால் இவ் அறிவிப்பானது பொய்யானது என்பதை 48 மணி நேரத்திற்குள் புகலிடத் தமிழர் சாதனங்களும், அமைப்புக்களும் சுட்டிக்காட்டின. செம்மணிப் புதைகுழி விசாரணைகளை கையாளும் சிறீலங்கா நீதிபதி ஏகநாத் கதிர்காமரின் அப்பட்டமான பரப்புரை நோக்கை சகிக்க முடியாது 'அது பொய்' என்பதை றொய்ட்டெர்ஸ் செய்தி நிறுவனத்திற்கு அளித்த பேட்டியில் குறிப்பிட்டிருந்தார். இவ்வாறு

## கதிர்காமர் அறிவிப்பு

**ஆயுதப்படைகள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் பற்றிய விசாரணையின் ஆர்வமுள்ள உள்நாட்டு, வெளிநாட்டு அனுமதிக்க முடிவுசெய்துள்ளது. இப் புதைகுளிகள் தோண்டப்படுவதற்கான வேலைகள் மார்ச் 5, 1999ல் ஆரம்பமாக உள்ளது.**

*– சிறிலங்கா வெளிவிவகார அமைச்சு அறிக்கை (12.02.99.)*

நிர்வாணமான சந்திரிகா-கதிர்காமர் அறிவிப்பானது வெளிவிவகார அமைச்சின் பிறிதொரு அறிக்கை மூலம் மீளப்பெறப்பட்டது.

இத் திடீர் அறிவிப்பின் பின்னணியை ஆராயின் மூன்று முக்கிய தேவைகளைப் பூர்த்தி செய்யவே சந்திரிகா - கதிர்காமர் கூட்டணி இச் செம்மணிப் புதைகுழிகளைத் தேர்ந்தெடுத்தது என்பது புலப்படும்.

அ) அண்மைக்கால வடமேற்கு மாகாணத் தேர்தல்களின் பின்னர் சந்திரிகாவை மோசமான வன்முறை சார்ந்த சனநாயக விரோத சக்தியாகவே உலகச் சமூகம் பார்க்கத் தொடங்கியுள்ளது. தமிழர்கள் மீதான போரை தமது திட்டமிட்ட பரப்புரைகளால் மறைத்து வந்த சந்திரிகா அரசு 'வயம்பா' தேர்தல் வன்முறைகளை மறைக்க முடியாது திண்டாடின. இவ்வாறு முகமூடி கழற்றப்பட்ட சந்திரிகா, தன்

## நீதிபதி பதில்

**'அந்த இரு விடயங்கள் (சிறிலங்கா வெளிவிவகார அமைச்சு தன் அறிக்கையில் தெரிவித்திருந்த விடயங்கள்) நீதிபற்ற விசாரணையினை திரிபுபடுத்தும் விடயங்களால் நான் செம்மணிக்கு விஜயம் செய்யவில்லை. நான் புதைகுளியை திறப்பதற்கான உத்தரவை வழங்கவும் இல்லை'.**

*– எஸ். எ. இ. ஏக்நாதன் (யாழ் நீதிபதி ) றொய்டரிடம் கூறியது*

னைக் குற்றமற்றவராகவும் பிறரே எப்போதும் குற்றங்கள் புரிபவர்களாகவும் நிரூபிக்க எடுத்துக் கொண்ட ஆதாரங்களே செம்மணிப் புதைகுழிகள். மோசமான மனித உரிமை மீறல் என உலக சமூகம் வர்ணிக்கும் செம்மணிப் புதைகுழி - யாழ் காணாமற் போனோர் விவகாரத்தை சாதுரியமாக கையாண்டு தன்னை நீதிமானாகக் காட்ட சந்திரிகா முயன்றுள்ளார்.

ஆ) எதிர்வரும் மார்ச் 22-ல் ஆரம்பமாகவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக் குழவின் 55வது கூட்டத்தொடரில் சிறீலங்கா மீதான அனைத்துலக விமர்சனத்தினை திசைதிருப்ப இவ் விடயத்தை சிறீலங்கா பாவிக்க முயல்கிறது.

இ) சிறிலங்காவில் இடம்பெறுவது இனப்படுகொலை என்பது வரலாற்று பூர்வமாக நிரூபிக்கப்பட்ட விடயமாகும். இப்படுகொலை குற்றங்களின் பிரதான காரணகர்த்தாக்கள்

## கதிர்காமர் குத்துக்கரணம்

**'பத்திரிகைகளுக்கு நீதவான் விடுத்த அறிக்கையை அடுத்து நாம் இவ்விடயம் பற்றி ஆராய்ந்தோம். வெளிவிவகார அமைச்சகத்தின் வெளியீட்டில் சில சரியற்ற அவதானிப்புகள் இடம்பெற்றுள்ளன. அதாவது நீதவான் சம்பவ இடத்திற்கு (செம்மணி) விஜயம் செய்தார். அத்துடன் தோண்டும் வேலைகள் மார்ச் 5, 1999-ல் ஆரம்பிக்க உத்தரவிட்டார் என்பனவே (தவறானவை) அது. இது உண்மையான தவறு'.**

*– சிறிலங்கா வெளிவிவகார அமைச்சு அறிக்கை (19.02.99.)*

சிங்கள தலைமைகளாகும். இன்று சந்திரிகா இதன் பிரதான குற்றவாளியாக இருக்கின்றார். இவ் அடிப்படை வன்செயலைத் திசைதிருப்பி இனப்படுகொலையின் ஒட்டுமொத்த வலைப்பின்னலையும் மறைத்துவிட்டு விடயங்களை தனித்தனியாக்கி சில இராணுவத்தினரை? சம்பவங்களிற்கு பொறுப்பாளிகள் ஆக்குவதன் மூலம் திட்டமிட்ட இனப்படுகொலையிலிருந்து சந்திரிகா தப்பித்துக் கொள்ள முயல்கிறார். இவ் யுக்தியை அனைத்துலக எண்ண ஓட்டத்தில் ஆழப்பதியவே சில தேர்வு பெற்ற தவிர்க்க முடியாத விடயங்களை சந்திரிகா - கதிர்காமர் கூட்டணி உரக்கச் சொல்லிவருகின்றது.

கிருசாந்தி கொலைவழக்கை கையாள முற்பட்டபோது அதன் தொடர்ச்சி செம்மணி வரை இழுபட்டுவிட்டது. இதன் பின்னர் சொல்லப்பட்ட செம்மணி குற்றம் பற்றிய விசாரணைகள் எடுக்கப்பட்டால் அதன் நேரடி பொறுப்பாளர்களாக இன்றைய தரைப்படைத் தளபதி சிறீலால் வீரசூரிய இருப்பார். ஏனெனில் அவரே யாழ். குடாநாட்டில் அன்றைய தளபதியாவார் இன்றைய மட்டக்களப்புத் தளபதியான மேஜர் ஜெனரல் ஜனக பெரேரா அன்று யாழ் நகர்ப்பகுதி தளபதியாக இருந்தார்.

இச் சூழ்நிலையில் சில விடயங்களை உரக்கச் சொல்லி தம்மை விடுவித்துக் கொண்டு விடயத்தை ஆறப்போடும் அரசியல் உத்தியை நீதிபரிபாலன மற்றும் இராஜதந்திர முனைகளில் அரசு பாவிக்க முனைகின்றது.

ஆனால் செம்மணிப் புதைகுழி விவகாரமானது தமிழர்களின் இதயத்தில் பதிந்துவிட்ட கொடிய இனப்படுகொலையின் சாட்சியங்களாகவும். இது தனித்து செம்மணி என்ற புவி அமைவிற்குள் அடங்கும் விடயமல்ல. முழுமையான இனப்படுகொலைகளும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு போர்க் குற்றங்களைப் புரிந்த அனைத்து சிங்கள அரசியல் — இராணுவ தலைமைகளும் தண்டிக்கப்பட வேண்டும் என்ற நியாயபூர்வமான வேண்டுதலின் பின்னணியில் அமைந்துள்ளது.

www.tamilarangam.net



# சுயபொருளாதாரமும் சுதேச வாழ்வும்

## ஒரு நோக்கு

**சென்ற இதழ் தொடர்ச்சி**

வளப் பிரயோகத்தில் சுற்றுச்சூழல் பாதிப்படைவதும், மாசுபடுவதும் ஏற்படும். இவைபற்றிய தெளிவான அறிவையும் கொண்டிருக்க வேண்டும். பல நாடுகளில் வணிக முதன்மைப்பாட்டில் வள அழிவும், வளத் தீர்வும் ஏற்பட அதிகம் வாய்ப்பேற்படுவது இன்றைய விதியாகி வருகிறது. இது தேசத்தின் வாழ்வை நிபந்தனையற்ற சரணாகதிக்கே ஒரு கட்டத்தில் கொண்டு சென்றுவிடும்.

இவையெல்லாவற்றிற்கும் அடிப்படையானது வளப்பிரயோகச் சிந்தனைதான். வளப் பிரயோகச் சிந்தனையின் மலர்ச்சி சுய பொருளாதாரக் கட்டமைப்புக்கு அத்திவாரமிட்டு ஸ்திரத்தன்மையை ஏற்படுத்தும். இது பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்தும் அதேவேளை பொருளாதாரத் தளம்பலில்லாமல் தேச-த்தை வைத்திருக்கும். வளங்களை இனம்காணுவதும் பிரயோகிப்பதும் பரந்த செயற்பாடாக அமையும்போது. சுய பொருளாதார எழுச்சியில் சுயமாக ஒவ்வொரு மனிதனும் ஈடுபடும் ஒரு பண்பு மலரும். இவ்வாறமையும் போது தேசிய வளங்களை பிற நாட்டவர் அள்ளிச்செல்லவும், திருடிக்கொள்ளவும் வாசல்கள் இல்லை. ஏனெனில் எல்லா வாசல்களிலும் நாம் தொழிற்பட்டுக்கொண்டிருப்போம்.


எமது மக்களின் புலப்பெயர்வின் அடிப்படையே வளங்களுடனான உறவின்மையாலும் வளங்களை இனங்காணாமையாலும் ஏற்பட்டதே. பேரினவாத அரசியல் சிந்தனை தமிழர்களின் சுயவாழ்வுக்கு இடமளிக்காத நெருக்கடி அரசியலையும் நிர்ப்பந்த வாழ்வையும் ஏற்படுத்தியது. சுய பொருளாதாரத்தை கட்டியெழுப்ப முடியாதவாறு அரசியல் பாரபட்சங்களையும், ஒடுக்குதலையும் ஏற்படுத்தியது. இதன் காரணமாக தமிழர்கள் 'திரவியந்தேடி திரை கடலோடி'னார்கள். தனிமை, பிரிவு, அந்நியம் என அலையும் விதியே வாழ்வென்று அடிமைச் சீவியத்தில் நம்மவர் உழல வேண்டியதாயிற்று. புலம்பெயர்ந்தோரின் புகைப் படங்கள் அழகிய அல்பங்களாக தோற்றம் காட்டினாலும் அவற்றின் பின்னால் எந்த ரகசியங்களும் இல்லை. மிகவும் துயரம் தருவதும், அனுதாபங்கோருவதுமான கண்ணீர்க் கதைகளே உண்மைகளாக இருக்கின்றன.

வளங்களை இனங்காணும் அறிதலுக்கான சாத்தியங்களை ஏற்படுத்தாது, சந்தர்ப்பங்களை வழங்காது, வளப் பிரயோகத்துக்கு இடமளியாது பேரினவாத அரசு நம்மை சிறைப்பிடித்தது.

நம் தேசத்தின் வளங்களைப் பிரயோகிக்காது நாம் புலம்பெயர்ந்து கூலி உழைப்பாளராகும் நிலை தான் ஏற்பட்டது. ஆனால், இதேவேளை நம் தேச வளத்தை சிறிலங்கா அரசு, தான் அபகரித்தும் பிறருக்கு விற்றும் வருகிறது. எம்மவரின் புலப்பெயர்வுக் கூலி உழைப்பு சேமிப்புக் கிடங்கு (Bank) என்ற பெயரில் இன்னமும் அரச வங்கிகளில் யுத்தத்துக்கான நிதியாகப் பாவிக்கப் பட்டுக்கொண்டிருக்கிறது. நாமே திரட்டிய உழைப்பின் பயனைப் பெருக்கும் பொருட்டு பிற தொழில் முயற்சிகளில் ஈடுபடவோ, சுய தொழில்மற்றும் வளப் பிரயோகம் என்பவற்றில் முதலிடவோ முடியாத அரசியல் இறுக்க விதியை ஏற்படுத்தி வைத்திருக்கிறது அது.

இவ்வாறு தொடரும் துன்பியல் வாழ்வின் கைதிகளாக தொடர்ந்தும் இருக்க நாமே அனுமதிப்பதா? நமது வருமானத்தை நம் சூழலிலேயே படியவைப்போம். சூழலுடன் இணையும் வாழ்வு எப்போதும் இயல்பாகவும், நேர்த்தியாகவும், அமைதியாகவும் இருக்கிறது. ஏனெனில் அது தேசத்தின் ஆன்மாவுடன் நெருங்கியதாக இருப்பதால்.

❋ ❋ ❋





தமிழீழம் ஒரு செழிப்பான பூமி. வளங்கள் பல நிறைந்த தேசம்.

தன்னிறைவான பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பி அதனை அபிவிருத்திப் பாதையில் இட்டுச் செல்லக்கூடிய நீர் வளத்தையும், நிலவளத்தையும், மனித தொழிலாக்க வளத்தையும் கொண்டது. இயற்கையின் கொடையாக எமக்கு வழங்கப்பட்ட இந்த வளங்களை இனங்கண்டு அவற்றை உச்ச பயன்பாட்டிற்கு கொண்டுவர வேண்டும். மக்களின் தேவைகளை நிறைவு செய்யும் வகையில் திறமையான திட்டமிடுதலின் அடிப்படையில் உற்பத்தியைப் பெருக்க வேண்டும். வேளாண்மையும் கைத்தொழிலுமே பொருண்மியக் கட்டுமானத்திற்கு அடித்தளமானது. தன்னிறைவான பொருளாதார வாழ்வுக்கு ஆதாரமானது. இந்த இரு துறைகளையும் கட்டிவளர்ப்பதில் நாம் முக்கிய கவனம் செலுத்தவேண்டும். இந்த இலக்கில் எமது அமைப்பான தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் ஆக்கபூர்வமான பல வேலைத் திட்டங்களை செயற்படுத்தி வருகின்றது. இந்த முயற்சிகள் வெற்றி பெற எனது ஆசிகள்.

*தமிழீழத் தேசியத் தலைவர்*
*வே. பிரபாகரன் அவர்கள்*

1994ஆம் ஆண்டு மே மாதம் 6ஆம் திகதி நடைபெற்ற வேளாண்மன்னர் கௌரவிப்பு நிகழ்வையொட்டி தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களினால் வழங்கப்பட்ட ஆசிச் செய்தியிலிருந்து ஒரு பகுதி.

www.tamilarangam.net



# எம்.ஜி.ஆரும் ஈழத்தமிழரும்



எம்.ஜி.ஆர். அவர்களை அப்போதைய சட்டமன்ற உறுப்பினர் திரு பழ. நெடுமாறன் அவர்கள் நன்கு அறிவார்கள்.

திரு. பழ. நெடுமாறன் அவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை வெளிப்படையாக ஆதரித்து, தடம்புரளாமல் இன்றுவரை தன் கொள்கையில் உறுதியாக இருப்பவர். ஈழப் பிரச்சனையில் எம்.ஜி.ஆர். அவர்களின் நிலைபற்றி நெடுமாறன் அவர்களிடம் கேட்டபோது, தனது தமிழ் தேசிய இயக்கப் பணிகளுக்கிடையிலும் அவர் தனது கருத்தை வெளிப்படுத்தினார். அது வருமாறு:

ஈழப்பிரச்சனை சம்பந்தமாக சட்டமன்றத்தில் ஒரு தீர்மானம் கொடுத்தேன். இந்திய அரசு உடனடியாக இதில் தலையிட வேண்டும் என்று வரிசையாக பத்து அம்சங்கள் அடங்கிய தீர்மானங்கள் கொடுத்திருந்தேன்.

அதுக்கு அப்புறம் அரசாங்கத்தில் இருந்து ஒரு தீர்மானம் கொண்டு வந்திட்டாங்க எந்த தீர்மானத்தை எடுத்துக்கிறது என்று முதல் கமிட்டிக்கு விட்டாங்க.

என் தீர்மானத்தை வலியுறுத்தல, டிஸ்போஸ் பண்ணசொன்னேன். அரசாங்கமே தீர்மானம் கொண்டு வந்த பிறகு எல்லாருமே அதை ஏகமனதாக நிறைவேற்றலாம் என்று சொன்னேன். அப்ப எம்.ஜி.ஆர். சொன்னாரு இல்லை இல்லை உங்க தீர்மானத்தை வலியுறுத்தியே பேசுங்க பின்னால நீங்க பேசின பிற்பாடு அந்த தீர்மானத்தை ஓட்டுக்கு விடவேண்டாம். என்று சொன்னார்.

என் தீர்மானத்தில் இலங்கை மீது பொருளாதார நடவடிக்கை எடுக்கும். இந்தியாவில் இருந்து எந்த பொருளும் இலங்கைக்கு அனுப்பக் கூடாது அது மாதிரி எல்லாம் என் தீர்மானத்தில் இருந்தது.

அதையெல்லாம் வலியுறுத்திப் பேசினேன் எனக்கு 20 நிமிசம் மட்டும் தான் ஒதுக்கியிருந்தாங்க. 20 நிமிசத்தில முடிக்க முடியல சபாநாயகரும் மணியடித்து ஞாபகப்படுத்தினார்.

அதுக்குள்ள எம்.ஜி.ஆர்., எஸ்.டி.எஸ். வழியாக எனக்கு குறிப்பு அனுப்பினார் நீங்க எவ்வளவு நேரம் வேணுமானாலும் எடுத்துக் கொண்டு பேசுங்க என்றார் அதுக்கு மேல 25 நிமிசம் பேசினேன். மொத்தத்தில் 45 நிமிசம் பேசினேன்.

எல்லோரும் பேசியபிறகு எம்.ஜி.ஆர். இதுக்கு பதிலளித்தார். அதுல என்ன சொன்னருன்னா. நெடுமாறன் தீர்மானங்கிறது. அவரது பேச்சும் அவரது தீர்மானமும் ஐந்து கோடி தமிழ் மக்களின் உணர்வைப் பிரதிபலிக்கிறது. இந்த உணர்வை மத்திய அரசாங்கம் புரிந்துகொள்ளணும். அவருடைய உணர்வுதான் இந்த அவையில் இருக்கிற எல்லோருடைய உணர்வும் அப்படின்னு சுட்டிக்காட்டினார்.

இனப்பிரச்சனை குறித்து அவ்வப்போது சட்டமன்றத்தில் தீர்மானம் கொண்டு வந்தும் நிறைவேற்றுவோர். இது ஒருபுறமிருக்க எம்.ஜி.ஆர். ஆரம்பகாலம் தொட்டே விடுதலைப் போராளிகளுக்கு ஆதரவாக இருந்தார்.

1982 ஆம் ஆண்டு ஜூன் மாதம் வாக்கில் பிரபாகரன் மற்றும் கைது செய்யப்பட்ட போராளிகளைத் தங்களிடம் ஒப்படைக்க ஆவண்டும் எனக் கேட்டு சிங்களக் காவல் துறை அதிகாரிகள் பறந்து வந்திருக்கும் செய்தி கேட்டு மதுரையில் இருந்து சென்னைக்கு விரைந்து வந்தேன்.

உடனடியாக அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டமொன்றைக் கூட்டினேன் 20 கட்சிகளின் தலைவர்கள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டார்கள். அ.தி.மு.க.வின் சார்பில் ப.உ. சண்முகம் இக் கூட்டத்தில் கலந்துகொண்டார் முதலமைச்சராக இருந்த எம்.ஜி.ஆர். அனுமதியோடுதான் கலந்து கொண்டார்.

பிரபாகரன் உட்பட கைதான போராளிகளை எக்காரணம் கொண்டும் சிங்களக் காவற்துறையிடம் ஒப்படைக்கக்கூடாது என்று தீர்மானம் நிறைவேற்றினோம்.

இதைக் காரணம் காட்டி எம்.ஜி.ஆர். அந்திய அரசுக்கு எழுதிய கடிதம் அன்று பிரபாகரன் உட்பட பல போராளிகளைக் காப்பாற்றியது.

இது தொடர்பாக எம்.ஜி.ஆர். அவர்கள் நான் சந்தித்த பொழுது எக்காரணம் கொண்டும் போராளிகள் எவரையும் சிங்கள் அரசிடம் ஒப்படைக்க, நான் சம்மதிக்க மாட்டேன் என அவர் உறுதி கூறினார். அதன்படி இறுதிவரை நடந்தார். அன்று எம்.ஜி.ஆர். அவர்கள் உறுதியுடன் எடுத்த நடவடிக்கை பிரபாகரன் உயிரைக் காத்ததோடு மட்டுமல்லாமல். தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு ஒரு தளநாயகனையும் கொடுத்தது என்பது தான் உண்மை.

பிரபாகரன் மீது வழக்கு இருக்கிறப்ப தப்பித்து போயிட்டார் அப்போது மதுரையில் எங்க வீட்டில்தான் இருந்தார் இங்கிருந்து தப்பித்துப் போனா நியாயப்படி என் மேல்தான் வழக்குப் போடணும். என்ன பிடிச்சுக் கொண்டு போய்தான் வைப்பாங்க அவர் தப்பிச்சு போனதற்கு உடந்தையா வழக்கு போட்டிருக்கணும்.

அப்போது என்னை வந்து காவற்துறை அதிகாரி ராஜசேகரன் நாயர் டிஜிபி கிரைம் பொறுப்பில் இருந்தவர்தான் வந்து பேசினாரு பிரபாகரன் இந்த மாதிரி செஞ்சது ரொம்ப தப்பு அவர் உயிருக்கு ஆபத்து வந்திடும் அதனால அவர் இருக்கிற இடத்தை சொல்லிருங்க என்றார்

நான் அவரிடம் உண்மையை சொன்னேன். அவர் யாழ்ப்பாணம் போய் சேர்ந்து எவ்வளவு நாளாகுது. இப்ப வந்து தேடுறீங்களேன்னு சென்னத அவர் நம்பவில்லை. புதுச்சேரியில்தான் இருக்காரு எங்களுக்கு தெரியும் என்றார் ராஜசேகரன்நாயர் போய்ப் பிடிங்க என்று சொன்னேன். இல்லை இல்லன்னாரு இது எல்லாம் என்கிட்ட பேசப்பிடாது என்று நானும் கடுமையாகப் பேசிய பிறகு போய்விட்டார்.

இரண்டு நாள் கழித்து எம்.ஜி.ஆர். சட்டசபை லாபியில் என்னை பார்த்துக்கூப்பிட்டார் போனேன் அப்படியே தோள்ள கையைப் போட்டு ரூமுக்கு கூட்டிக்கொண்டு போனார். பி.ஏ.க்களை எல்லாம் வெளியே போகச்சொல்லிட்டாரு உட்காரவைத்துவிட்டு என்ன உங்க நண்பரை பத்திரமாக அனுப்பிச்சிட்டிங்க போல இருக்கு ஆமா பத்திரமாக போயிட்டாரு என்றேன் உண்மையாகவே பத்திரமாகபோய் சேர்ந்திட்டாரா? என்று கேட்டாரு உண்மையாகவே போய் சேர்ந்திட்டாரு உங்க அதிகாரிங்கள் தான் நம்ப மாட்டாங்கிறாங்கன்னவுடன் அதிகாரிகள் கிட்ட எதுக்கு சொல்றீங்க இத நீங்க என்கிட்டமட்டும் சொன்னா போதும் அவங்க கிட்ட சொல்லவேண்டியதில்லை என்றார்.

மீண்டும் பத்திரமாக இருக்காருல்ல என்று இரண்டு தடவை கேட்டாரு நல்லா இருக்கிறாரு பத்திரமாக இருக்கிறாரு போய் சேர்ந்த செய்தியும் வந்து விட்டது என்றவுடன் ரொம்ப மகிழ்ச்சியாக இருக்கிறது என்றார் அப்புறம் வேற விசயங்கள் எல்லாம் பேசிவிட்டு அனுப்பினார்.

நியாயப்படி பிரபாகரன் தப்பித்து போனதற்கு இருந்ததற்கு வழக்குப் போட்டிருக்கணும் அல்லது தொந்தரவு கொடுத்திருக்கணும் ஒண்ணுமே செய்யலயே அவர் அப்ப பிரபாகரன் தப்பித்துப் போகணும்கிறத விரும்பினாரு என்பது தான் அர்த்தம்.


ஆனா அவர் உள்ளுக்குள்ள அரசாங்க ரீதியாகவும் தன்னுடைய தனிப்பட்ட முறையிலும் ஈழப் பிரச்சனைக்கு ஆதரவாக என்ன என்ன செய்யவேண்டுமோ அத்தனையும் செய்திருக்கிறார்.

விடுதலைப்புலிகளுக்கு வெளிப்படையாக அவர் கொடுத்த பணம் போக பல மடங்கு அதிகமான தொகை அவர்களுக்கு ரகசியமாக கொடுத்து இருக்கிறார் அதுல ஒண்ணும் சந்தேகம் இல்லை.

அந்தப் போராட்டம் வெற்றி பெறணும்கிற ஒரு ஆதங்கம் இருந்த காரணத்தால்தான் அவர்களுக்கு உதவிசெய்தார். அதுலயும் தமிழ்நாட்டில் அவர் காலத்தில் அகதிகளாக வந்தவர்களுக்கு நிறைய உதவிகள் செய்திருக்கிறார். அன்றைக் கெல்லாம் இந்தமாதிரி சிறப்பு முகாம்கள் எல்லாம் கிடையாது.

தமிழீழத்தில் இருந்து சிகிச்சைக்காக கொண்டுவரப்பட்ட விடுதலைப் புலிகளானாலும் சரி மக்களானாலும் சரி அரசாங்க மருத்துவமனைகளில் சேர்த்து சிகிச்சையெல்லாம் கொடுக்கப்பட்டது. எல்லா வகையிலும் விடுதலைப்புலிகளுக்கு உறுதுணையாக இருந்தார்.

எல்லா வகையிலும் எம்.ஜி.ஆர். அவர்கள் தமிழீழப் போராட்டத்திற்கும் ஈழத்தமிழர்களுக்கும் பக்கபலமாக இருந்து உலகத் தமிழினக் காவலராக செயல்பட்டார்.




தமிழகத்தைச் சேர்ந்த திரு.தங்கநேயன் என்ற எழுத்தாளர், 'எம்.ஜி.ஆரும் ஈழத்தமிழரும்' என்ற இந்நூலை எழுதியுள்ளார்.144 பக்கங்களைக் கொண்ட இந்நூலில் பல தலைவர்கள், எழுத்தாளர்கள், அரசியல்வாதிகள் தெரிவித்த கருத்துக்கள், செய்திகள் அடக்கப்பட்டுள்ளன. இந்நூலில் திரு.பழ.நெடுமாறன் அவர்கள் தெரிவித்த விடயங்களே இப்பக்கத்தில் இடம்பிடித்துள்ளது.

www.tamilarangam.net





# எழுத்து இலக்கியமாகின்றது

**(சென்ற இதழ் தொடர்ச்சி)**

இன்றுள்ள எழுத்துக்களுள், 'இலக்கியம்' என்பதும் ஒன்று. ஆனால் எல்லா எழுத்துக்களும் இலக்கியமன்று.

இலக்கியம் எனும்பொழுது இங்குநாம் படைப்பிலக்கியத்தையே கருதுகின்றோம்.

அடுத்து, இந்தப்படைப்பிலக்கியத்தின் தன்மையை நன்கு, தெளிவுற விளங்கிக் கொள்வது அவசியமாகின்றது.

படைப்பிலக்கியமென்பது ஏதோ ஒருவகையில் மக்கள் பற்றியதே. இங்கு 'மக்கள் பற்றியது' எனும்பொழுது பிரதானப்படுவது 'மக்கள் உணர்வே'யாகும். இதனைச்சற்று விரிவாக நோக்குவது அவசியம்.

மக்கள் என்னும் பெயர் ஆண்கள், பெண்கள், குழந்தைகளை குறிப்பதுதான். இலக்கியத்தில் நாம் 'ஆண்கள்', 'பெண்கள்', 'குழந்தை'களை மக்கள் என்னும் பொழுது, அவர்களை பண்டநுகர்வாளர்கள் கூட்டமாகவோ அல்லது பிரயாணிகள் குழுவாகவோ அன்றேல் பார்வையாளர் தொகுதியாகக் கொள்வதில்லை, குறித்த ஒரு மனிதநிலையில் இந்த மக்கள் தொழிற்படுகின்ற பொழுதே அவர்கள் இலக்கியத்தின் 'மக்கள்' ஆகின்றனர்.

குறித்த மனிதநிலை என்பது மனிதத்துவத்தை, மனிதனின் மானிடத்தன்மையைக் காட்டுவதாகும். இந்த மானிடத்தன்மை வெளிவருவதற்கு மனித உறவுகள் வேண்டும். அந்த உறவுகளின் பொழுது மனித உணர்ச்சிகள் வெளிவரும். இந்த மனித உணர்ச்சிகளின் பொழுதுதான் அந்த மானிடத்தன்மை (அல்லது அது இல்லாதிருக்கின்ற தன்மை) தெரியவரும். இந்த மானிடத்தன்மையை எடுத்துக் கூறுவதற்கான காரணம் யாது? மனித உணர்ச்சிகளை மையமாகக்கொண்டு மனிதநிலைகளைச் சித்திரிப்பதன் மூலம் மனிதன் பற்றிய அறிவு, மனிதன் பற்றிய விளக்கம் நமக்கு ஏற்படுகிறது. அதுதான் உண்மையான ஆக்க இலக்கியம்—படைப்பிலக்கியம். அந்த வாசிப்பால் நாம் உணர்வு ரீதியாககவரப்படுவது மாத்திரமல்லாது அறிவு ரீதியாகவும் வாழ்க்கை பற்றி, மனிதன் பற்றி ஒரு விளக்கத்தைப் பெற்றுக் கொள்கிறோம்.


இந்தக் கட்டத்திலேதான் கட்டுரை நீதி இலக்கியத்திற்கும் படைப்பிலக்கியத்திற்குமுள்ள வேறுபாடு தெளிவாகும்.

படைப்பிலக்கியம் மனித உறவு, உணர்ச்சிப்பிரச்சனைகளை சித்தரிப்பதன் மூலம், மனிதன் பற்றிய, வாழ்க்கை பற்றிய ஒரு உண்மையை, ஒரு தெளிவை, ஒரு விளக்கத்தை ஏற்படுத்துகின்றது.

நீதி வாக்கியமாக 'பெண்ணாசை வேண்டாம்' எனலாம். அது வெறும் வார்த்தைக் கோவைதான். ஆனால் மண்டோதரி மகனின் உடலை வைத்துக்கொண்டு கதறிஅழுது 'சீதை என்னும் அமுதாள் செய் நஞ்சினால் இலங்கை வேந்தன் நாளை இத்தகையன் அன்றே' என்று துடிக்கின்றதாக கம்பன் சித்தரிக்கின்ற பொழுது, பெண்ணாசையால் ஏற்படும் அவலம் ஒரு இராட்சியத்தையே வேரோடு அசைத்தெறிவதைக் காணலாம்.

இந்திய சுதந்திரப்போராட்டத்தின் வரலாற்றை பல வரலாற்று நூல்களில் வாசிக்கலாம். மீள மீள வாசிக்கலாம். ஆனால் காஜா அகமது அப்பாஸ் எழுதிய 'இன்குலாப்' என்னும் நாவலை வாசிக்கும் பொழுது இந்திய சுதந்திரப் போராட்டத்தை மறைக்கவே முடியாது. எத்தனை இளைஞர்கள், எத்தனை யுவதிகள் எவ்வாறெல்லாம் போரிட்டார்கள் என்பது வரலாறாக அல்லது மனித ஆவணமாக மானிடப் பதிவாக அமைந்து விடுகிறது. இரஷ்யா தனது பெருங்கைத் தொழில் வளத்தை எவ்வாறு வளர்த்துக்கொண்டதன் மானிடப்பதிவை 'How Stil was Tempew' என்ற நாவலில் கண்டுகொள்ள வேண்டும்.

இந்த உதாரணங்கள் மூலம் தெளிவாகும் உண்மை இதுதான். கலைப்படைப்பு உலக விளக்கத்துக்கு வேண்டிய அறிவையும் உணர்ச்சியையும் இணைக்கிறது. இரண்டையும்தான். வெறுமனே உணர்ச்சியை அன்று வெறுமனே அறிவை மாத்திரமன்று. தனியே அறிவை மாத்திரம் தரின் அது 'அறிவியல்' வயப்பட்டதாகவும் அது விளங்கப்படும்மட்டம் வேறு கலைப் படைப்புத்தரும் விளக்கம் முழுமானிடம் பற்றிய உண்மையாக அல்லது உண்மையின் ஒரு சுடராகப் பொறிவிடும்.



**-பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி-**

இக்கருத்தை நான் வற்புறுத்திக் கூறுவதற்கு ஒரு முக்கியமான காரணம் உண்டு. ஒரு கருத்தை, கருத்தாகவே எடுத்துச் சொல்வதால் அது இலக்கியமாகாது. அந்தக் கருத்தை மனித நிலைப்படுத்தி, மனிதப் பிரச்சினையாகக் காட்ட வேண்டும். அப்பொழுதுதான் 'எழுத்து' இலக்கியமாகும்.

இவ்வாறு இலக்கியமாகும் எழுத்து முதலில் கவிதையிலேதான் காணப்படும் அடுத்து சிறுகதை, நாவல் ஆகிய புனைகதை வடிவினுள் வரும். இவற்றினுள் சிறுகதையில் அது ஒரு 'மனித நிலை' யாகச் சித்திரிக்கப்படும். நாவலில் வரும் பொழுது அது ஏதோ ஒரு வகையில் சமூகப் பகுப்பாய்வாகவே வரும்.

கவிதையில் வரும்பொழுது இரட்டைக்கவர்ச்சி உண்டு. ஒன்று கட்டமைப்பான கவிதைக்குள் நிற்கும் சொற்களின் ஜீவத்துடிப்பு மற்றது இது இசையுடன் சேரும்பொழுது பொருத்தமான இசையாக இருத்தல் வேண்டும். அதுதான் யாப்பு - அந்தக் கவிதைக்கு ஒரு உணர்ச்சிப்பிடிப்பு ஏற்படுகிறது. இதனாலேதான் நமது பாரம்பரியத்தில் கவிதை 'பாட்டு', 'பாடல்' ஆகின்றது.

எழுத்து இலக்கியமாகின்ற பொழுது அது மனிதனுடைய பிரச்சினைகளை மனித உறவின் பின்னணியில், மனித நிலையில் நின்று சொல்கிறது.

இத்தகைய இலக்கியங்கள் எம்மை, நாம் இன்றிருக்கின்ற நிலையிலிருந்து இன்னொரு கட்டத்துக்கு இட்டுச் செல்வனவாகவிருக்கும். எங்கள் பார்வைகளை அகட்டுவனவாக, தரிசனங்களை விஸ்தரிப்பனவாக அமைய வேண்டும். இவ்வாறு செய்யும்பொழுது இலக்கியம் எம்மை இப்பொழுது நோக்கும் பிரச்சினைக்கு 'முகம் கொடுக்க' உதவுவனவாக மாத்திரமல்லாது வரவிருக்கும் பிரச்சினைகளுக்கும் எம்மைத் தயார் செய்வதாக அமைத்துவிடும். இவ்வாறு நோக்கும் பொழுதுதான் இலக்கியம் பற்றிய ஒரு மிகமுக்கியமான உண்மை தெரியவரும். அதாவது இலக்கியம் சமூக இலக்குகளை நிர்ணயிக்கின்றது. நாம் எதனை நோக்கிச் செல்ல வேண்டும் என்பதையும் மனித ஆவணமாகத்தருவது இலக்கியம்.

'ராமராஜ்யம்' என்பது ராமாயணத்தின் நிறைவு. 'என்னருமை நாடே அழு' (Cry my below country) என்னும் நாவல் ஆபிரிக்க கறுப்பர்களின் சுதந்திரத்தை இலக்கிய இலட்சியமாக்குகின்றது. இக்பாலின் கனவு பாகிஸ்தான் ஆகிறது. இந்தியாவின் ஒருமைப்பாட்டை விளக்க வந்த தாகூரின் பாடல் அந்த நாட்டின் தேசிய கீதமாகவே மாறிவிடுகின்றது.

பாரதியின் தீர்க்கதரிசனங்கள் நமது சமூக இலக்குகளாகியுள்ளது.

எழுத்து இலக்கியமாகிறது.

இலக்கியம் மனித முன்னேற்றத்துக்கான சமகாலத் தளைகளிலிருந்து மனிதனை விடுவிக்கப்படுவதற்கான உந்து குரலாகின்றது.

**முற்றும்**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# தேசியம் வரலாற்றின்

உலகில் ஒரு சாராரால் மிகவும் பிழையாக விளங்கிக்கொள்ளப்பட்ட விடயங்களில் ஒன்றாய் 'தேசியவாதம்' உள்ளது. 'தேசியவாதம்' குறுகிய மனப்பாங்கு கொண்டதென்றும், அது பிற்போக்கானது என்றும், அது கைவிடப்பட வேண்டிய தென்றும் இன்று கொழும்புவாழ் தமிழ், சிங்களப் புத்திஜீவிகள் சிலர் அடுக்கடுக்காய் கருத்துக்களை முன் வைக்கின்றனர். மேற்குலகிலும் இவ்வாறான கண்ணோட்டம் கொண்டோர் உளர்.

அண்மைக்காலத்தில் வெளியான இத்தகைய பிழையான கருத்துக்களைக் கண்டு விசனமுற்ற சிலர் இதுபற்றிய ஒரு கண்ணோட்டத்தைக்குறிப்பாக இளம் தலைமுறையினர் மத்தியில் முன் வைக்கவேண்டியது அவசியம் என்று கூறிக் கொண்டதன் விளைவே இக் கட்டுரையாகும். இதில் தனித்தனியாக பெயர்களை குறிப்பிட்டோ, அல்லது அவரவர் கருத்துக்களை தனித்தனியாக எழுதியோ ஒரு பெரும் வாதப் பிரதிவாதம் புரிவதை விடவும் கருத்துக்களைப் பொதுமைப்படுத்தி நேர்கணியமான ஒரு கண்ணோட்டத்தை மிகச் சுருக்கமாக முன் வைப்பதாகவே இக்கட்டுரை அமைகின்றது.

- மு.திருநாவுக்கரசு -

தேசியவாதம் மிகவும் சிக்கலானது இதனை விளங்குவதும் விளக்குவதும் சிரமமானது என்று ஒரு பொது வான அபிப்பிராயம் உண்டு. இதில் உள்ள பிரதானமான பிரச்சனை, இது பிழையாக விளங்கிக் கொள்ளப்பட்டதி லிருந்தே ஆரம்பமாகின்றது.

தேசியவாதத்தை அதன் கருப் பையில் இருந்தும் அதன் இயல் பில் இருந்தும் அடையாளம் காணல் அவசியமாகின்றது. மனிதகுலம் கண்டுகொண்ட மிகவும் முன்னேற்றகரமான விடயங்களில் ஒன்றாய் தேசி யம் உள்ளது. இது சில வேளை ளில் பிழையாகப் பிரயோகிக் கப்பட்டு இனவெறியாகவும் மேலாதிக்க வாதமாகவும் ஆக் கிரமிப்பு வாதமாகவும் மாறிய உதாரணங்கள் உள்ளன. இங் குள்ள பிரச்சனை என்னவெ னில் இனவெறி, மேலாதிக்க வாதம், ஆக்கிரமிப்பு வாதம், என்பவற்றை தேசியத்திலிருந்து பிரித்து இனம் காண வேண் டுமே தவிர இவற்றைத் தேசி யத்துடன் சேர்த்துக் குழப்பக் கூடாது. அடுத்து தேசியத்தை ஒரு குறுகிய் வாதம் என்று கூறுவோர். அதனை பிழையாக விளங்கிக் கொண்டோரும், ஒரு வரலாற்றுக் கால கட்டத் தில் சகல மனிதக் கூட்டமும் அதனை அடைந்தே ஆகவேண் டும். என்பதைத் தெரிந்து கொள்ளாதவர்களுமேயாவர். தேசிய வாழ்வைப் பூர்த்திசெய் யாமல் அடுத்த கட்ட வளர்ச் சிக்கு இடமில்லை. அவ்வாறு வளர்வதாக யாரும் சொல்வார் களேயானால் அது ஒரு குறை விருத்தியே தவிர வேறில்லை. அதாவது குறைவிருத்தி என் பது பொருந்தாத வளர்ச்சி அல் லது சூம்பிய உடம்பிற்கு கன மான பெருத்த தலைபோன் றதே அது.

நவீன அர்த்தத்தில் தேசியத் தின் தொட்டில் மேற்கு ஐரோப் பாவாகும். தேசிய சமூகமும் தேசிய வாழ்வும் மனித குலம் அதுவரை கண்டறிந்த முன்னேற் றங்களில் ஒரு சிறப்புக் கூறாகும். மனிதன் என்றால் கூட்டுவாழ் வைக் கொண்டவன். கூட்டு வாழ்வின்றி எந்தவொரு மனித னாலும் (தெய்வமே மனித னாய் பிறந்தாலும் கூட) ஓர் அங்குலம் தானும் முன்னேற முடியாது மனிதனது கூட்டு வாழ்வில் அவனது ஆகச் சிறிய அலகு குடும்பமென்றால் கூட்டு வாழ்வின் ஒரு முக்கிய பெரிய அலகு தேசியமாகும். குடும்பம், கூட்டுக் குடும்பம், கிராமம், இனக்குழு எனப் பல கூட்டு வாழ்வு அலகுகள் உள்ளன. இந்தவரிசையில் பெரிய கூட்ட லகாய் தேசியம் உள்ளது.

குடும்பம் எனும் தொடக்கக் கூட்டலகு தனது வாழ்விற்கும் வளர்ச்சிக்குமாக அடுத்த பெரிய கூட்டலகுடன் கூடி இசைவு படுகிறது. இதனை விடவும் வளர்ச்சிக்கு இன் னொரு பெரிய அலகு தேவைப்படும் போது அந்த அலகைத் தாண்டி அல்லது கரைத்து அடுத்த பெரிய அலகுடன் குடும்பம் தன்னை இணைத்து இசைவுபடுத்திக் கொள்கிறது. இந்த வகையில் குடும்பம் எனும் தொடக்க அலகு தன்னை இணைத்துக் கொள்ளும் பெரிய கூட்டல காய் தேசியம் உள்ளது. (குடும் பம் எனும் தொடக்க அலகு சர்வதேசியத்தின் உச்ச வளர்ச் சியில் பரிணாம ரீதியில் கரைந்து போய்விடும் என்ற ஒரு கருத்து உண்டு இக் கட்டு ரையின் தேவையில் அது விவா தத்துக் குரியதல்ல.)

இனக்குழு வாழ்வுமுறை, வட்டார வேறுபாடு (பிரதேச வேறுபாடு) பரம்பரை அந்தஸ்து (உதாரணம் நேரு பரம்பரை, பண்டாரநாயக்கா பரம்பரை) பிறப்பால் உயர்ந்தவன், தாழ்ந் தவன் என்ற நிலைபோன்ற இத்தகைய வேறு பாடு மிக்க அலகுகளைத் தகர்த்து தேசியம் எனும் ஒரு வட்டத்துக்குள் அனைவரும் ஒருவருக்கொரு வர் சமதை ஆனவர் என்பது டன் ஒரு தேசியத்துடன் மற் றைய தேசியம் உயர்வு தாள் வின்றி சமதையானது என்பதே தேசிய வரலாற்றின் குறிக்கோ ளாகும். தேசியத்தின் அடிப்ப டையில் அனேகருக்கும் பொது வான வாழ்வுமுறை அரசியல் சமூக விடயங்களில் சாமானி




யர்களின் சகாப்தத்தை தோற்று வித்தமை என்பன தேசியத்தின் சிறப்பம்சங்களாகும்.

பல்வேறு அடிப்படைகளை தனித்தனியே சிறு சிறு குழுக்க ளாக வாழ்ந்துவந்த மனிதர்க ளின் குறுகிய எல்லைகளைத் தகர்த்து ஒரு தேசிய அடையா ளத்தின் கீழ் ஒரு பெரும் வெகுஜனத்திரட்சியை உருவாக் கியமைதான் தேசியவாதமாகும். இத்தகைய வெகுஜனத்திரட் சியை ஐரோப்பாவில் கைத் தொழில் வளர்ச்சியே சாத்திய மாக்கியது. அதாவது கைத் தொழில் வளர்ச்சிதான் மூலப் பொருட்களை ஓரிடத்திலிருந்து இன்னோர் இடத்திற்கு நகர்த்த வும் ஒன்று திரட்டவும் பின்பு பண்டங்களை உற்பத்தி செய்து அவற்றை பரந்த அடிப்படை யில் விநியோகிக்கவும் சந்தைப் படுத்தவும் இதன் நிமித்தம் போக்குவரத்துச் சாதனங்களி னாலும், போக்குவரத்து வீதிக ளினாலும், தொலைத் தொடர்பு சாதனங்களினாலும் மனிதன் இடையறாது ஒருவருடன் ஒரு வர் தொடர்பு படவும் ஒன்று குவியமும் முடிந்தது. இவ்வாறு உருவான வெகுஜன திரட்சிக் கேற்ப வெகுஜன அரசியல் உட்பட பல்வேறு வெகுஜன பண்புகள் தோன்றின. நிலத்து டன் ஒட்டிக் கொண்டிருந்த கிராமிய, நிலப்பிரபுத்துவ உள் ளொடுங்கிய வாழ்விற்குப் பதி லாக நிலத்திலிருந்து பிடுங்கப் பட்டு எங்கும் நகர்ந்து இடை யறாது பல்வேறு புதிய தேடல் களுடன் மனிதன் குவிகின்ற வெகுஜன பண்பைத்தான் நாம் தேசிய கலாச்சாரம் என்று கூறு வோம். அதாவது பழைய சிறு வட்டவாழ்வையும் அதன் குறு கிய உறவுகளையும் உடைத்து தேசிய அடிப்படையில் குவி யும் பெரிய பெரிய சனத்திரட் சிக்கு ஏற்ற ஒத்துப் போதலை யும் அதற்குப் பொருத்தமான


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தவிர்க்கப்படவியலாத ஒரு கட்டம்

பழக்க வழக்கங்களையும் அதற்கேற்ற புதிய ஒழுங்குகளையும் சட்ட திட்டங்களையும் சேர்த்தே தேசிய கலாச்சாரம் என்று அழைக்கின்றோம். சிலர் கலாச்சாரம் என்ற உடன் ஆடை, அணிகலன்களையும் மேளதாளங்களையும் கொண்டாட்டங்களையும் நினைக்கின்றார்கள்.

ஒரு தேசியத்திலிருந்து இன்னொரு தேசியத்தை வேறுபடுத்தி அடையாளம் காண உதவும் சில பண்பாட்டுக் குறியீடுகள் தான் இவை. ஆனால் இவைகள் மட்டுமே பண்பாடாகி விடாது. அதாவது தனித்துவமான தேசிய அடையாளங்களுடன் கூடியதும் புதிதானதுமான வெகுஜனத் திரட்சிக்கேற்ப புதிய அரசியல், பொருளதார, சமூக பண்பாட்டினைத் தான் தேசியப் பண்பாடு என்கிறோம்.

சிறிய குழு அலகிலிருந்து வெகுஜனத் திரட்சியை நோக்கிய வெடிப்பு (உடைப்பு) ஏற்பட்டுச் செல்கையில் அத்தகைய உடைப்பானது மதம், அல்லது மொழி, அல்லது இனம் (உடல் அமைப்பு வேறுபாடு) அல்லது பெரிய அளவினதான பிரதேச தனித்துவம் என்ற எல்லை வரை விரிந்து ஆனால் அந்த எல்லையை உடைக்க முடியாத விட்டத்து அத்தகைய எல்லையின் பெயரால் (மொழி, மதம், இனம், என்பதன் பெயரால்) தம்மை ஒரு தேசியம் என அழைத்துக் கொள்ளுதலும், அந்தத் தேசியத்துள் அனைவரும் ஒருவருக்கொருவர் சமனானவர் என்பதுடன் ஒரு தேசியம் மற்றுமொரு தேசியத்துக்கு சமனானதும் என்பதே தேசிய வாதமாகும். இதனால் தேசிய வாதமென்பது முற்றிலும் வெகுஜனத் தன்மை கொண்டதும் (ஜனநாய உள்ளடக்கம் கொண்டதும் என்பதாகும் ஜனநாயகம் என்பது அனைவருக்கும் சமஉரிமை உண்டு என்பது ஒருவர் தனக்கு இருப்பது போன்ற அதே உரிமை மற்றவருக்கும் இருக்கின்றது என்பதை ஏற்றுக் கொள்வது. அதே போல ஒரு தேசியத்திற்கு இருக்கும் உரிமை போலவே மற்றத் தேசியத்திற்கும் உரிமை உண்டு என்பதை ஏற்றுக் கொள்வது என்ற ஒரு புதிய கலாச்சாரத்தையே தேசிய ஜனநாயகம் என்கிறோம்.

சிறு உள் வட்ட எல்லைகளை உடைத்துக்கொண்டு போகும் பாதையில் மேற்கூறியவாறு மொழி, மதம் போன்ற பெரிய எல்லையில் தேசியம் தடைசெய்யப்பட்டு நின்றுவிடுவதால் பல தேசியங்கள் தோன்ற வேண்டியிருந்தன. இவையே பிரிட்டிஸ் தேசியம், பிரெஞ்சுத் தேசியம், ஸ்பானியத் தேசியம், டச்சுத் தேசியம், எனத் தேசியங்கள் பலவாகக் காணப்படுகின்றன. எனவே தேசியத்தின் இறுதி எல்லையாக மதம் அல்லது மொழி அல்லது இனப் பிரதேசத் தனித்தவம் என்பன கூட்டாகவோ அன்றித் தனியாகவோ தேசியத்தின் புறஉருவ எல்லைகளாயின. மேற்கூறிய அடிப்படையில் தேசியத்தை மூன்று முக்கிய அலகுகளாக வகுக்கலாம்.



**1. புறவுருவ எல்லை:**

மொழி, மதம் பிரதேசத் தனித்துவம் இனப் பண்பு போன்ற வகை .

**2. அகவளர்ச்சி:**

புறவுருவ எல்லைக்குள் இடம் பெறுவதாகிய தேசிய ஐக்கியம், தேசிய ஒருமைப்பாடும், கூடி வாழும் பொதுவான பண்பாடும் பழக்கவழக்கங்களும், தேசியக் கலையும், வாழ்க்கை முறையும் வெகுஜனத் திரட்சிக்கேற்ப புதிய பரந்த மனப்பாங்கு சட்டதிட்ட அரசியல் முறைகள் என்பன அகரீதியான தேசிய அம்சங்களாகும்.

**3. தேசிய ஒருங்கிணைப்பிற்கான புறக்கட்டுமானங்கள்:**

போக்குவரத்துப் பாதைகள் வீதி, புகையிரத வீதி, மற்றும் போக்குவரத்தும், போக்குவரத்துச் சாதனங்களும், தொலைத் தொடர்புச் சாதனங்கள், வெகுஜனத் தொடர்புச் சாதனங்கள், சுகாதார ஏற்பாடுகள், தங்குமிட வசதிகள், பொது இட வசதிகள் இவற்றிற்கு மூலமான கைத்தொழில் வளர்ச்சிக்கான ஏற்பாடுகள், சந்தை வசதிகள் எனப்பலவாகும்.

மொழி, மதம், பிரதேசம், மற்றும் இனக்கூறுகள் போன்ற அம்சங்கள் தேசிய வாதம் தோன்றமுன் ஏற்கனவே இருந்த அம்சங்களாகும். அனைவரும் திரண்டு கூட்டிணைந்து பெரும் ஜனத்திரளாக வாழ்வதற்கான புதிய பண்பாட்டின் தோற்றமும் புறக்கட்டுமானமும்தான் தேசியத்தில் இடம்பெறும் புதிய அம்சங்களாகும் தேசியக்கட்டுமான வளர்ச்சி என்பது அக வளர்ச்சி, புறவளர்ச்சி தன்னியல்பாகவும் ஏற்படலாம். அல்லது உணர்வுபூர்வமாகவும், ஏற்படுத்தப்படலாம். தன்னியல்பான வளர்ச்சி போதாத இடத்தோ அல்லது இல்லாத இடத்தோ உணர்வு பூர்வமான வளர்ச்சி அத்தியாவசியமானதாகின்றது.

ஒரு மக்கள் கூட்டத்தின் தேசிய வளர்ச்சி இன்னொரு தேசிய வெறியாலோ அல்லது தேசிய மேலாதிக்கத்தாலோ அல்லது தேசிய ஆக்கிரமிப்பாலோ தடைசெய்யப்படுமிடத்து பாதிக்கப்படும் தேசியம் அத்தடையை அகற்றுவதற்கான போராட்டம் அன்னிய எதிர்ப்புத் தேசியப் பேராட்டம் எனப்படும். அதே வேளை குறித்த தேசியத்திற்குள் தேசிய வாழ்வுக்குத் தடையாக இருக்கும் காரணிகளுக்கு எதிராகப் போராடுவது முதல் நிலையில் தேசிய சீர் திருத்தம் எனப்படும். அது உச்ச நிலையில் தேசியப் புரட்சி எனப்படும். சில வேளைகளில் தேசிய விடுதலையும் தேசியப் புரட்சியும் ஒன்று சேர வேண்டியும் இருக்கும் உலகில் ஒரு பகுதியினர் அரசியல் பொருளாதார ரீதியிலும் தொழில் நுட்ப ரீதியிலும் தேசிய எல்லைகளைத் தாண்டி 'சர்வதேசியத்தில்' குதித்துள்ளனர். ஆனால் மறு பகுதியினரில் குறிப்பாக ஆசிய, ஆபிரிக்க மக்கள் தமக்குரிய குறைந்த பட்சத் தேசிய வாழ்வைக்கூட ஈட்டமுடியாமல் தவிக்கின்றனர்.

♦♦

**மனிதனுக்கு மிகவும் பிரியமானது அவனுடைய வாழ்க்கை! மனித வாழ்க்கை வாழ்வதற்கே! ஆனால் ஒரு முறை திரும்பிப் பார்த்துக் கொண்டால், பயந்தாங்கொள்ளியாகவும் பயனற்றவனாகவும், வாழ்ந்தேன் என்று வெட்கத்துடன் தலைசாயும் நிலைமை வரக்கூடாது, அர்த்தமற்ற மனவேதனையுடன் சித்திரவதையுடன் வருடங்கள் உருண்டோடி விட்டனவே என கழிவிரக்கம் கொள்ளும் பிழைப்பு வேண்டாம்! என் வாழ்க்கை பூராவும் என் திறமைகள் அனைத்தையும் மனித சமுதாய விடுதலையெனும் உலகிலேயே மகோன்னதமான லட்சியத்திற்கே அர்ப்பணித்தேன், என்று கண்ணை மூடும்போது நினைக்கும்படி வாழ்வது தான் மனித வாழ்க்கைக்குப் பெருமை அளித்திடும்.**

**- ஆஸ்ட்ரோவ்ஸ்கி** (புகழ்பெற்ற சோவியத் எழுத்தாளர்.)

www.tamilarangam.net









08.02.99 அதிகாலை கச்சதீவிற்கு அண்மையில் சிறிலங்கா கடற்படையுடன் ஏற்பட்ட நேரடி மோதலின் போது 5 போராளிகள் வீரச்சாவைத் தழுவிக் கொண்டனர்

லெப்.கேணல் நீலன்
**சிவலிங்கம் சுகாஸ்கரன்**
திருகோணமலை மாவட்டம்

மேஜர் சிந்தனைச்செல்வன்
**பிரான்சிஸ் சேவியர் பிரான்சிஸ் ஜோன்**
யாழ் மாவட்டம்

மேஜர் இசைவேந்தன்
**தூசையப்பு குருஸ் அமர்நாத் குருஸ்**
மன்னார் மாவட்டம்

மேஜர் குமரன்
**கனகசிங்கம் ஜெயரூபன்**
யாழ் மாவட்டம்

மேஜர் நெறியான்
**நடராஜா ஜோகேஸ்வரன்**
யாழ் மாவட்டம்

09.02.99 அன்று அம்பகாமத்தில் சிறிலங்கா இராணுவத்துடன் ஏற்பட்ட நேரடி மோதலில்போது போராளி ஒருவர் வீரச்சாவைத் தழுவிக் கொண்டுள்ளார்.

வீரவேங்கை புரட்சிபாலன்
**உருத்திரமூர்த்தி கிருபானந்தராசா**
திருகோணமலை மாவட்டம்

19.02.99 அன்று மணலாற்றுப்பகுதியில் இராணுவத்துடன் ஏற்பட்ட நேரடிமோதலில் போராளி ஒருவர் வீரச்சாவைத் தழுவிக் கொண்டுள்ளார்

வீரவேங்கை கலையரசன்
**இராசரட்ணம் பரமேஸ்வரன்**
திருகோணமலை மாவட்டம்

09.02.99 அன்று வன்னியில் இராணுவத்துடன் ஏற்பட்ட மேதலில் 4 போராளிகளும் ஒரு தேசப்பற்றாளரும் வீரச்சாவைத் தழுவிக் கொண்டுள்ளார்கள்.

லெப். பார்த்தீபன்
**கனகசபை பிரதீபன்**
அம்பாறை மாவட்டம்

2ம் லெப். சேரன்
**தியாகராஜா சுதாகரன்**
அம்பாறை மாவட்டம்

2ம்லெப். ராசசுதன்
**வேலுப்பிள்ளை சுதாகரன்**
அம்பாறை மாவட்டம்

2ம் லெப். காண்டீபன்
**முத்தையா இலங்கேஸ்வரன்**
அம்பாறை மாவட்டம்

தேசப்பற்றாளர் சின்னத்தம்பி பாலன்
திருகோணமலை மாவட்டம்

16.02.99 அன்று மூன்று முறிப்பு பகுதியில் இராணுவத்துடன் ஏற்பட்ட நேரடி மோதலில் 4 போராளிகள் வீரச்சாவைத் தழுவிக் கொண்டுள்ளனர்.

வீரவேங்கை அருளானந்தி
**குணநாயகம் தெய்வம்**
திருகோணமலை மாவட்டம்

வீரவேங்கை அருள்மொழி
**ஆவுடையப்பன் நாகேஸ்வரி**
புளியம்குளம்

வீரவேங்கை புகழ்நிலா
**பாலசிங்கம் ஜெயந்தி**
நெடுங்கேணி

வீரவேங்கை எழில்செல்வி
**சிவலிங்கம் ஜெயலெச்சுமி** (வவுனியா)

15.02.99 அன்று பரந்தன் பகுதியில் இராணுவத்துடன் ஏற்பட்ட நேரடி மோதலில் போராளி ஒருவர் வீரச்சாவைத் தழுவிக் கொண்டுள்ளார்.

வீரவேங்கை அமல்
**ராஜகோபால் ஜெயகுமார்** (யாழ் மாவட்டம்)

16.02.99 அன்று மணலாறு பகுதியில் இராணுவத்துடன் ஏற்பட்ட நேரடி மோதலில் 2 போராளிகள் வீரச்சாவைத் தழுவிக் கொண்டுள்ளனர்.

வீரவேங்கை துசானி
**சுப்பிரமணியம் புவனேஸ்வரி**
மட்டக்களப்பு மாவட்டம்

வீரவேங்கை லதாதேவி
**கோபாலப்பிள்ளை சுதாநாயகி**
மட்டக்களப்பு மாவட்டம்

12.01.99 அன்று குச்சவெளிக் கடற்பரப்பில் சிறிலங்காக் கடற்படையினருடன் ஏற்பட்ட மோதலில் விழுப்புண் அடைந்திருந்த போராளி ஒருவர் 19.02.99அன்று வீரச்சாவைத் தழுவிக் கொண்டுள்ளனர்.

வீரவேங்கை வைகுந்தன்
அன்ரனிசைமன் ஆனந் விமல்ராஜ்
யாழ். மாவட்டம்
த/மு பெரியபண்டிவிரிச்சான், மடு, மன்னார்

20.02.99 அன்று மாங்குளம் பகுதியில் இராணுவத்துடன் ஏற்பட்ட மோதலின் போது போராளி ஒருவர் வீரச்சாவைத் தழுவிக் கொண்டுள்ளார்.

வீரவேங்கை மதி
**பஞ்சாட்சரம் கருணாகரன்**
மாங்குளம்
த/மு 44. கோயில் குடியிருப்புத்திட்டம், ஜெயபுரம்

22.02.99 ஒட்டிசுட்டான் பகுதியில் இராணுவத்துடன் ஏற்பட்ட மோதலில் போராளி ஒருவர் வீரச்சாவைத் தழுவிக் கொண்டுள்ளார்.

வீரவேங்கை நாதகோபன்
**நடராசபிள்ளை காளிதாசன்**
திருகோணமலை
த/மு நெடுங்கேணி முள்ளியவளை

சுவிஸ்
07.03.99
சனிக்கிழமை
மாலை 7.00 மணி
Volkshaus மண்டபம்
Stauffacher str 60
8004 Zurich
தொடர்புகட்கு
01 273 34 07
தமிழீழ விடுதலைப் புலிகள் (சுவிஸ் பணியகம்)




பிரித்தானியா
07.03.99
ஞாயிற்றுக்கிழமை
மாலை 5.00 மணி
Searchlight Youth & Community Centre
Kingston Road
New Malden
Surrey KT3 3RX
தொடர்புகளுக்கு
0181 503 4294 – 0956 168 794
07775 788 039
ஐக்கிய தமிழர் அமைப்பு - பிரித்தானியா

www.tamilarangam.net



# தேர்தல் வெற்றி குறித்து சந்திரிகா.. சமாதானம் குறித்து மதத்தலைவர்கள்..

— சுப்பு —


**சிங்களம் சமாதானப் பாதையில் தானே ஏற்படுத்திய தடைகளால் தானே தள்ளாடிக் கொள்ளுகின்றது. எப்படி அவற்றை அகற்றுவது என்பது தெரியாமல் முழிபிதுங்கிக் கொள்ளுகின்றது. வழிதெரியாமல் மீண்டும் அதே பாதையில் பயணப்படுகின்றது.**

யுத்தத்தின் தீச்சுவாலை, தென்பகுதியையும் கருக்கிப் பொசுக்கி, அதன் வளங்களையும் நலன்களையும் சிறிதுசிறிதாக அழித்துவருவதால் சிங்களத்தின் மத்தியில் ஒருவிதமான விளிப்புநிலை ஏற்பட்டிருக்கின்றது போன்றே தெரிகின்றது. வெறும் வர்த்தகத் தொடர்புகளில் மாத்திரம் தம்மைப் பிணைத்து, மூளையைப்போட்டுக் கசக்கிப் பிழிந்து லாபம் சம்பாதிப்பதே குறியாகக் கொண்ட வர்த்தகத் தலைவர்களுக்குக் கூட ஞானம் பிறந்து சமாதானம் பேச ஆரம்பித்துவிட்டார்கள். கடந்த ஆண்டு, கொழும்பிலுள்ள வர்த்தகத் தலைவர்களால், ஒரு சமாதான முயற்சி மேற்கொள்ளப்பட்டது. பின்னர் அது முன்னும் அரங்காமல் பின்னும் அரங்காமல் வெறுமையாக ஆரம்பித்தநிலையிலேயே நிற்கின்றது என்பது வேறு, ஆனால் அவர்களைச் சமாதானம் பேச வைத்தது எது?

யுத்தத்தின் அதிர்வு அங்கே எதிரொலிப்பதன் விளைவு என்பதைத் தவிர, மனித நேயமாக இது இருக்கப் போவதில்லை. இனஅடக்குமுறைக்கு உட்பட்ட தமிழ்த்தேசிய இனத்தின் மீது கொண்ட அனுதாபத்தின் பேரிலான அங்கலாய்ப்பாகவும் இருக்கப் போவதில்லை.

என்றாலும் இந்த முயற்சி தோல்வியடைந்தது. சிங்களம் தனது அனைத்துத் துறைகளிலும் கட்டிவளர்த்து விட்ட இந்த இனமுரண்பாட்டில் சமாதானம் தொங்கிக்கிடப்பதால், இது இலகுவில் தீர்க்கப்பட முடியாத ஒரு சிக்கல் நிலையை அதற்கு ஏற்படுத்தியிருக்கின்றது.

இப்பொழுது அவர்களுக்கு அதிகம் தேவைப்படுவதாக இருப்பது தமக்குள்ளான ஒற்றுமையாக இருப்பதால், இப்பொழுது அதுவிடயத்திலேயே அவர்களின் கவனம் திரும்பியிருக்கின்றது. தேர்தல்கள் முடியும் வரையிலாவது தமக்கிடையேயான ஒற்றுமை குறித்த கரிசனையை அவர்கள் கொண்டிருப்பர்.



இப்போதுபோல் அப்போதும்.

இந்த நிலையிலும், சமாதானத்தின் தேவையை உணர்ந்து, தென்பகுதியைச் சேர்ந்த புத்தமதத்துறவிகள், கிறித்தவமதத் தலைவர்கள், சமாதான ஆர்வலர்கள் சமாதான முயற்சியொன்றை இந்தவருடத்தில் முதல் முதலாக ஆரம்பித்துள்ளனர். முன்பும் இதுபோன்ற பல சமாதானப் பயணங்களை மேற்கொண்ட மதத் தலைவர்கள் உட்பட முப்பது பேரடங்கிய மதத்தலைவர்கள் குழுவே இம் முயற்சியில் ஈடுபட்டுள்ளது. வன்னி சென்று விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் மற்றும் விடுதலைப் புலிகளின் முக்கிய பிரமுகர்களைச் சந்தித்து கொழும்புதிரும்பிய சர்வமதத் தலைவர்கள் குழு, கொழும்பில் தமது விஜயம் குறித்து பத்திரிகையாளர் மாநாட்டை நடத்தி, தமது பயணத்தின் நோக்கத்தையும் சமாதானத்தின் அவசியத்தையும் வலியுறுத்தியுள்ளது.

விடுதலைப் புலிகள் சமாதானப் பேச்சுவார்த்தையின்மீது, சமாதானத் தீர்வின்மீது அதிக ஆவலாக இருக்கின்றனர் என்பதை மதத்தலைவர்கள் வெளிப்படுத்தினர். தற்போது பதிலளிக்கவேண்டியவர்கள், அரசாங்கத் தரப்பினர்தான் என்பதில் அவர்களிற்கு சந்தேகம் இல்லை.

விடுதலைப் புலிகளை, கடந்த ஆண்டு பெப்ரவரி மாதம் சிறீலங்கா அரசு தடைசெய்யப்பட்ட இயக்கமாக அறிவித்துள்ளது. இந்த நிலையில் பேச்சுவார்த்தை சாத்தியமாகப் போவதில்லை. ஆகவே, அந்தத் தடையை நீக்கிவிட்டு பேச்சுவார்த்தைக்கு அரசை கொண்டுவரும் பொறுப்பு மேற்படி மதத்தலைவர்களினது என்பதை விடுதலைப் புலிகள் தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிருக்கின்றனர். ஆக, மதத் தலைவர்களின் சமாதான முயற்சி என்பது அவ்வளவு இலேசான காரியமாகப் படவில்லை. சிங்கள அரசு போட்ட பெரும் தடைகளை முட்டுக்கட்டைகளை அகற்றி சமாதானத்திற்காக பாதையமைப்பது என்பது அவ்வளவு இலகுவாகப்படவில்லை.

சிறீலங்கா அரசால் எடுத்தேன் கவிழ்த்தேன் பாணியில் மேற்கொள்ளப்பட்ட விடுதலைப் புலிகள்மீதான தடையை அகற்றுவது என்பது, அரசு விரும்பினால்கூட அதனாலேயேகூட மேற்கொள்ளமுடியாத நிலையே காணப்படுகின்றது. புத்தபிக்குகளைத் திருப்திப்படுத்த தடையை உசாராக அறிவித்த சந்திரிகா, அதனை அகற்றுவற்கு பெரும் சிக்கலை எதிர்கொள்வார் என்பதில் சந்தேகமில்லை.

விடுதலைப் புலிகள் மீதான தடையை அகற்றுதல் ஒருபக்கம் இருக்க, பொருளாதாரத் தடையும், மருந்துத்தடையும் உறுத்திக்கொண்டிருக்கின்ற அடுத்த பிரச்சினை.

சமாதான முயற்சியை மேற்கொண்டுள்ள மதத் தலைவர்களின் முன்னே இருக்கின்ற அடுத்த பிரச்சினை இதுவாகும். மக்களுக்கு செல்லும் உணவை விடுதலைப் புலிகள் பெற்றுக்கொள்ளுகின்றனர் எனவும் மக்களுக்கான மருந்துகளை அவர்கள் அபகரித்துச் செல்லுகின்றனர் எனவும், சந்திரிகா அரசு தனது மனித விரோதச் செயல்களுக்கு காரணம் கூறிவருகின்றது. சமாதானப் பாதையில் குறுக்கிட்டு நிற்கும் இத்தடையையும் அகற்ற வேண்டிய தேவையும், இம்மதத் தலைவர்களின் முன்நிற்கின்ற பிரச்சினையாகும்.

சரி, அதுதான் சாத்தியமாகிவிட்டதென்றாலும் அடுத்து ஒரு பெரும் பிரச்சினை பூதாகாரமாக முன்னே நிற்கின்றது. அதாவது இராணுவ ஆக்கிரமிப்பு அகற்றப்படுதல் என்பது. மக்களைக் குடியெழுப்பி அவர்களின் குடிமனைகளில், கோவில்குளங்களில், பாடசாலைகளில், மருத்துவமனைகளில், கடைகண்ணிகளில் முகாம் அமைத்து, மக்களை வளைத்துப் பிடித்து, இராணுவ ஆதிக்கம் செலுத்தும் சிங்கள ஆக்கிரமிப்புப்படை அகற்றப்படுதல் வேண்டும் என்பது சுமூக சூழ்நிலையை ஏற்படுத்தல் என்பதில் முக்கியம் பெறுகின்ற விடயமாகும்.

சிங்கள இராணுவம் ஆக்கிரமித்த பகுதிகளில் இருந்து பின்வாங்கி, தமது முன்னைய பழைய நிலைகளுக்குச் செல்லுதல் என்பது, சமாதானப் பேச்சுவார்த்தைக்கு ஒரு முக்கிய தேவையாகப்படுகின்றது.

சமாதான முயற்சிக்கு முட்டுக்கட்டையாக உள்ள இந்த இராணுவ ஆக்கிரமிப்பை அகற்றுவதென்பது, சமாதான முயற்சியில் இறங்கியுள்ள மதத்தலைவர்களின் முக்கிய பணியாக இருக்கின்றது.

இராணுவ வெற்றிகளையே தனது அரசியல் ஆதாயமாக்கக் காத்திருக்கும் சந்திரிகா அரசு, இந்த இராணுவ பின்வாங்கலை ஏற்றுக்கொள்ளுமா? பெரும் உயிர்விலை கொடுத்து, பெரும் ஆயுத இழப்பைச் சந்தித்து, பெரும் பொருளாதாரப் பின்னடைவைச்சந்தித்து நிலைநாட்டிய இராணுவ வெற்றிகளை சந்திரிகா அரசு இழக்கச் சம்மதிக்குமா? யாழ்ப்பாணத்தில் கொடியேற்றி மகிழ்ந்த சிங்களம், இராணுவத்தை பலாலிக்குப் பின்வாங்கிக்கொள்ள சம்மதிக்குமா? சந்திரிகா நினைத்தாலும் முடியாத அளவிற்கு இராணுவத் தலைமையின் பிடிவாதம் அங்கு இருக்கின்றது. படைத்தலைமையின் கருத்துக்களுக்கு ஏற்பவே ஆட்சியை நடத்திச் செல்ல வேண்டிய நிலைக்கு, ஆட்சிபீடம் ஆட்பட்டிருக்கின்றது.

ஆக, இராணுவத்தை மீளப்பெற்று சுமூகநிலையை ஏற்படுத்துவதென்பது சிங்கள ஆட்சிபீடத்தைப் பொறுத்தவரை தற்கொலைக்கு ஒப்பானது.

சிங்களம் சமாதானப் பாதையில் தானே ஏற்படுத்திய தடைகளால் தானே தள்ளாடிக் கொள்ளுகின்றது. எப்படி அவற்றை அகற்றுவது என்பது தெரியாமல் முழிபிதுங்கிக்கொள்ளுகின்றது. வழிதெரியாமல் மீண்டும் அதே பாதையில் பயணப்படுகின்றது.

பௌத்த மதத்துறவிகளில் ஒரு சாரார், விடுதலைப் புலிகளைப் பயங்கரவாதிகளாகவும், தமிழ்மக்கள் அடிமைப்படுத்தபடவேண்டிய உரிமைகளற்ற மக்களாக பிரகடனப் படுத்தப்பட வேண்டியவர்கள் எனவும், யுத்தத்தின்மூலம் தமிழரின் போராட்டம் அழிக்கப்படவேண்டும் எனவும் வலியுறுத்தி நிற்க, இன்னொரு சாராரோ, சமாதானத்திற்கு தூதுபோயிருக்கின்றனர்.

ஆக, ஒரு சமாதானப் பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதற்கு முன்னதாக இப்பெரும் தடைகளை, அகற்றியாகவேண்டியுள்ளது. சமாதானம் தோன்றவேண்டும் என்ற நோக்குடன் புறப்பட்டுள்ள இந்த மதத் தலைவர்களின் முயற்சி வெற்றிபெறுவதற்கான வாய்ப்புக்கள் தெரியவில்லை.

கடந்த வாரம், மதத்தலைவர்களின் சமாதான முயற்சிகுறித்து ஆர்வம் காட்டிய சிங்களமும், செய்தியூடகங்களும், ஏப்பிரல் மாதம் நடைபெற இருக்கின்ற மாகாணசபைத் தேர்தல் குறித்தே தற்போது ஆர்வம் காட்ட ஆரம்பித்துள்ளன. சமாதான முயற்சி சற்றைக்கு ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளது. தற்போது தேர்தலே முக்கியம். அதனை வெல்வது எப்படி என்பதே, சிங்களத்தின் தலைவர்களது தற்போதைய தலையாய பிரச்சினை. முறைகேடுகள் இன்றி, மோதல் இன்றி, வன்முறை இன்றி எப்படி தேர்தலை நடத்துவது என்பதுகுறித்துத்தான் தற்போதைக்கு அவர்கள் தமக்கிடையே பேச்சுவார்த்தை நடத்துவர். அதன் தேவை அவர்களிற்கு முக்கியமாக இருப்பதால், பேச்சுவார்த்தை குறித்து தற்போதைக்கு எழும் செய்தி அதுவாகவே இருக்கும்.

◆◆

www.tamilarangam.net



# கனைப்பொழுது

## கப்டன். அன்புக்கினியன்




இவன் திருகோணமலையின் கிராமப்புறமான குச்சவெளி என்ற இடத்தில் 02.11.1978ம் ஆண்டு வறுமையான குடும்பத்தில் பிறந்தவன் இவன் இளமையில் இருந்தே துன்பத்தின் மத்தியில் வாழ்ந்து வந்தான். சிங்கள இராணு வத்தாலும் சிங்கள மக்களாலும் அங்கு வாழும் தமிழ் மக்கள் அடக்கி ஆழப்பட்டு வந்தனர். அவர்களின் வீடுகள், வயல்கள், சொத்துகள் தீயிட்டு எரிக்கப்பட்டு வந்தன. அதனால் அகதிகளாக உண்ண உணவின்றி உடுக்க உடையின்றி காடுகளிலும் மலை யோரங்களிலும் அம் மக்கள் வாழ்ந்து வந்தனர். அப்போது அன்புக்கினியனுக்கு 12 வயது இவன் இளமையிலேயே சுறுசுறுப்பானவன் சிறிது நேரம் கூட ஓய்வாக இருக்கமாட்டான். சிங்களவர்களாலும் இராணுவத்தாலும் இளமையில் இருந்தே தாக்கப்பட்டு வந்ததனால் அவனது உள்ளத்தில் இராணுவத்தின் மீது வெறுப்பும் அவர்களை அழிக்க வேண்டும் என்ற உணர்வும் தீயாக வளர்ந்து கொண்டே வந்தது. இப்படி வாழ்ந்து கொண்டிருக்கும் பொழுது 1990ம் ஆண்டு சிங்கள இனவெறியினர் காடுகளில் வாழ்ந்த மக்களை வெட்டியும், துப்பாக்கியினால் சுட்டும் தமிழ்மக்களை அழித்தனர்.

சிங்களக் காடையர்களின் கையில் படாத சில தமிழ் மக்கள் உயிரை கையில் பிடித்த படி தப்பியோடி வந்தனர். சனத்தோடு சனமாக அன்புக்கினியனும் ஓடி வந்தான் அவ்விடத்தில் இருந்து தாயையும் தந்தையையும் பிரிந்தான். அங்கிருந்து வடக்கு நோக்கி போராளிகள் பயணம் செய்வதுண்டு அன்புக்கினியன் அவர்களைக் கண்டான் அவன் அவர்களுடன் நடந்து போராளிகளின் முகாமிற்கு வந்தான். அங்கே நின்ற போராளிகள் இவனை சில நாட்கள் வைத்திருந்துவிட்டு நீ சின்னப்பொடியனாய் இருக்கிறாய் பயிற்சி எடுக்கமாட்டாய் என்று சொல்லி அனுப்பினார்கள். அப்போது இவனுக்கு ஒருவரையும் தெரியாது என்ன செய்வது என்று தெரியாமல் சென்று கொண்டே இருந்தான் செல்லும் போது அந்த கிராமப் பொறுப்பாளரை சந்தித்தான். அவன் அவரிடம் நடந்ததைக்கூறினான் அவரும் கேட்டுவிட்டு வா தம்பி வா என்று கூட்டிச்சென்று ஒரு அக்கா வீட்டில் தங்கும் படி விட்டார். அவன் அவர்களை அம்மா அப்பா போலவே நேசித்து வந்தான் அவர்களும் பிள்ளைபோல் அவனை கவனித்து வந்தார்கள் இப்படியாக இரண்டு வருடம் அவர்களுடன் வாழ்ந்து வந்தான் பின்னர் 1992ம் ஆண்டு தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தில் தானும் ஒருவனாக இணைந்து கொண்டான். பயிற்சிபெற்று அன்புக்கினியன் என்ற பெயரும் வளங்கப்பட்டு வெளியே வந்தான். வேலைகள் செய்வதிலும் சரி செயற்பாடுகளிலும் சரி அவன் தன் திறமைகளை வெளிக்காட்ட தவறவில்லை. அப்போது முல்லை மாவட்டதளபதி அவனை ஐம்பது கலிபர் ஆயுதப்பிரிவிற்கு விட்டார். அவன் நன்றாக பயிற்சி செய்வான் என்பது எல்லாப் போராளிகளுக்கும் தெரிந்தது விளையாட்டிலும் சரி வேலையிலும் சரி திறமையாக செய்வான். இந்தவேளையில் மண்கிண்டிமலை முகாம் தாக்கி அழிப்பதற்கான பயிற்சி கொடுக்கப்பட்டது. இரண்டுமாத காலம் பயிற்சி நடைபெற்றது இதில் ஒரு நிமிடம் கூட பயிற்சியை வீணாக்காது பயிற்சி பெற்றான். இறுதியில் சண்டைக்கான காலம் குறிக்கப்பட்டது. போராளிகள் யாவரும் ஆயத்தமானார்கள் சண்டைக்கான ஒழுங்குகள் செய்யப்பட்டன. இரவோடு இரவாக முற்றுகையிட்டு திட்டமிட்டபடி சண்டை ஆரம்பமானது பின்னர் ஆயுதங்களையும் வெடிபொருட்களையும் அள்ளிக்கொண்டு வந்தனர் வீரச்சாவடைந்த போராளிகளையும் காயமடைந்தபோராளிகளையும் தோளில் சுமந்தபடி எமது பிரதேசத்திற்கு வந்தனர். அச்சண்டை திட்டமிடப்பட்டபடியே வெற்றிகரமாக நடாத்திமுடிக்கப்பட்டது. பின்னர் வேறு ஒரு படை முகாமிற்கான பயிற்சி தளபதிகளினாலும் பொறுப்பாளர்களினாலும் வளங்கப்பட்டது போராளிகள் யாவரும் நல்ல உற்சாகமாக பயிற்சி எடுத்தனர் அப்போதும் அன்புக்கினியன் கனரகப்பிரிவின் பொறுப்பாளராக இருந்தான் அவன் தளபதிக்கு ‘என்ரை அணிதான் உள்ளுக்கை இறங்கவேணும்’ என்று சொன்னான் ‘ஓமடாப்பா உன்ரை அணியைத்தான் தேர்ந்திருக்கிறன் உன்ரை அணியைத்தான் உள்ளுக்கை சண்டைக்கும் விடப்போறன்’ என்றார் பொறுப்பாளர். அவன் இனிமேல் இல்லை என்ற மகிழ்ச்சியுடன் தன்னுடைய அணிக்கு வந்து சொன்னான் போராளிகளும் சந்தோசப்பட்டனர். 10.11.93 அன்று திட்டமிட்ட படி படையணியினர் நகர்ந்தனர் அவரவர்களின் நிலைகளில் விடப்பட்டு இரவோடுஇரவாக உற்சாகத்தோடு நிலைகளை அவதானித்த படி இருந்தோம் பூநகரி கூட்டுத்தளம்மீது இரவு 11மணிக்கு சண்டை ஆரம்பமானது எங்கும் ஒரே வெடி முழக்கம் இராணுவத்தின் கூக்குரலும் அவலக்குரலும் கேட்டபடி இருக்க அன்புக்கினியனுக்கு கொடுக்கப்பட்ட வேலைகள் அவனால் ஒழுங்காக அதன் படியே செய்து முடிக்கப்பட்டது. வெற்றிகரமாக இச்சண்டை நடைபெற்றது. அன்புக்கினியனுக்கு கட்டளை பிறப்பிக்கப்பட்டது அவனுடைய அணியைகொண்டு ஒருபாதை திறக்கும்படி மறுகணம் அவன் தன்னுடைய அணியைக் கொண்டு சென்று கடற்கரையிலிருந்து தனது ஐம்பது கலிபர் ஆயுதத்தால் தடைகளை உடைத்து ஓடுபாதை எடுத்துக்கொடுத்தான். அவ்வழியாக படையணி நகர்த்தப்பட்டது இப்படியாக அச்சண்டை வெற்றிகரமாக முடிந்தது. அச்சண்டையில் முல்லை மாவட்ட சிறப்புத்தளபதி லெப். கேணல் அன்பு அண்ணா உட்பட பலபோராளிகள் வீரச் சாவைத் தழுவிக்கொண்டனர் மீண்டும் முல்லைமாவட்டத்தில் வந்து எதிரியின் நிலைகளான கொக்குத்தொடுவாய் கென்பாம் படை முகாமின் காவலரன் தகர்ப்பிலும் பங்கு கொண்டான். 18.02.96 அன்று இதயபூமியாக விளங்கும் மணலாற்றுக்காட்டுப்பகுதிக்குள் எதிரியின் நடமாட்டம் அதிகரித்து வந்தது அதனை என்ன வழியாக அடக்கலாம் என திட்டம் வகுக்கப்பட்டது அதற்கான பயிற்சிகளும் வளங்கப்பட்டது போராளிகளும் உற்சாகமாக பயிற்சி எடுத்தனர் சண்டைக்கான தேதியும் குறிக்கப்பட்டது அன்புக்கினியனுக்கும் P.K.ஆயுதம் வழங்கப்பட்டு, அவருக்கு பிடிக்க வேண்டிய இடங்களையும் வரைபடம் மூலம் விளக்கப்பட்டது பின்னர் எல்லோருடைய பிரச்சனைகளையும், சந்தேகங்களையும் தெரிவித்து விடைகள் பரிமாறப்பட்டன பின்னர் அன்று இரவுச் சாப்பாட்டை முடித்துவிட்டு சண்டைக்கான இடத்திற்கு நகர்ந்து சென்றனர். ஒவ்வொரு அணியும் குறிப்பிட்ட இடத்தில் விடப்பட்டது. 19.03.96 அன்று 01.00 மணியளவில் சண்டை ஆரம்பமானது ஒவ்வொரு அணியினரும் கொடுக்கப்பட்ட பிரதேசத்தைப்பிடித்து கட்டுப்பாட்டு நிலைக்கு கொண்டு வந்தனர் அன்புக்கினியனுக்கு கொடுத்த இடம் ஒரு பாதையினால் பாதுகாப்புக்கு வரும் எதிரியை தாக்குவதுதான். அவன் அவதானித்தபடியே இருந்தான் எதிரி கிட்டவரவிட்டு விட்டு P.K.யினால் தாக்குதல் தொடுத்தான் பாதுகாப்பிற்கு வந்த எதிரி சின்னாபின்னமாக சிதறிஓடினான். பின்னர் பின்நோக்கி வரும்படி கட்டளையிடப்பட்டது அப்போது எல்லோரும் பாதுகாப்புக் கொடுத்து பின்னால் அழைக்கப்பட்டனர் அந்நேரம் எதிரியின் நிலையிலிருந்து ஏவப்பட்ட ஒருரவை அன்புக்கினியனின் இதயத்தை பதம் பார்த்தது அப்படியே அவன் வைத்திருந்த ஆயுதத்தை இறுகப் பற்றியபடி அம்மண்ணை முற்ற மிட்டான் அவனின் கனவுகள் நினைவாகும் படி நாமும் அவ் வழியே செல்வோம்.



– போராளி
த.தமிழ்வேந்தன் –

www.tamilarangam.net





# சுதந்திர தாகம்

## மலரன்னை

**புலர்ந்தும் புலராத அந்த அதிகாலைப்பொழுதில் நிர்மலா கிணற்றில் இருந்து நீரை அள்ளி தன் மேனியில் ஊற்றத் தொடங்கினாள்.**

ஸ்..! ஸ்..! ஸ்..!

குளிர்ந்த நீர் பட்டதும் அவளையறியாமலே அவளது மேனி சிலிர்த்துக் கொண்டது. சிலிர்த்த மேனியை தணிய வைக்கும் நோக்குடன் அவசரமாக அடுத்த வாளி நீரை மொண்டு மேனியில் ஊற்றிக் கொண்டாள். ரியூசனுக்கு நேரமாகி விட்டதேயென்ற அவசரம் அவளை உந்தித்தள்ள சில வாளிகளுடன் தனது குளிப்பை இடை நிறுத்திக் கொண்டு 'சோப்'பை எடுத்து மேனியெங்கும் போடத்துவங்கினாள்.

சோப்பின் சுகந்தம் அவளது நாசியைத் துளைத்து அவளுள்ளத்தில் புதியதோர் கிளுகிளுப்பைஏற்படுத்தியது. அவளை அறியாமலே அவளது நினைவுகள் வன்னியை நோக்கித் தாவியது.

முன்பெல்லாம் இங்கு வீட்டில் பாத்றூமில் குளித்து வந்த அவளுக்கு முதன் முதலாக எதுவித மறைப்பும் இன்றி அம்பலத்தில் நின்று உடைமாற்றுவதும், குளத்தில் இறங்கிக் குளிப்பதும் கூச்சத்தை ஏற்படுத்தியது என்னவோ உண்மைதான். ஆனால் நாளடைவில் அதுவே இனிய அனுபவமாக மாறிவிட்டது. அங்கு பழகிய அந்தப் பழக்கம் காரணமாகத்தான் இங்கே இந்த வெட்ட வெளியில் நின்று அவளால் குளிக்க முடிகிறது. காரணம் அவர்களது வீட்டின் முன்புறம் அமைந்திருந்த வோட்டர் ராங்கும் அதன் கீழிருந்த பாத்றூமும் பாதுகாப்புக் கருதி படையினரால் தகர்க்கப்பட்டுவிட்டது.

அது மட்டுமா? வீட்டின் முன்புறத்து மதிலும் கூட இடிக்கப்பட்டுவிட்டது. அவளுடைய அப்பா மறைவுக்காகப் போட்ட கிடுகு வேலியும் அவர்களால் பிடுங்கி எறியப்பட்டு விட்டது.

நினைவுகளிலிருந்து விடுபட்டவளாய் நிர்மலா குளிப்பை முடித்துக் கொண்டு உடைமாற்றத் தொடங்கினாள். ஏதோ அரவம் கேட்டது பார்வையை நிமிர்த்தினாள் உடைந்த மதிலடியில் நின்று ஓர் உருவம் தன்னையே அவதானித்துக் கொண்டிருப்பதைக் கண்டாள். கையில் ஆயுதம் தரித்திருந்த அந்த உருவத்தை இனங் கண்டு கொண்டவள் செய்வதறியாது ஒரு கணம் தயங்கினாள். மறுகணம் வீட்டினுள் ஓடி மறைந்தாள்.

'அம்மா!'

அவலமாக ஒலித்தது குரல்.

ஈரம் சொட்டச் சொட்ட தன் முன்னால் ஓடி வந்து நின்ற மகளை கண்ணுற்ற அம்மா அரண்டு போனாள்.

அழுகைக்கு மத்தியில் நிர்மலா விடயத்தை கூறினாள்.

'அம்மா! நாங்கள் அங்கையே இருந்திருக்கலாம், வீணாய் நீங்கள் தான் எங்களை இங்கை கொண்டு வந்து சிறைப்படுத்திப் போட்டியள்.'

ஆத்திரத்துடன் வந்தன வார்த்தைகள்.

'சுதந்திரமில்லாத வாழ்க்கை நரகத்துக்கொப்பானது.'

அம்மா முதன் முறையாக உணர்ந்து கொண்டாள்.

'நீ அழாதை பிள்ளை நாளையில இருந்து நானும் கொப்பருமாய் தண்ணியை அள்ளிக் கொண்டந்து வீட்டுக்குப் பின்னால் கிடாரத்தை வைச்சு ஊத்தி விடுறம் நீ மறைவில நிண்டு குளிக்கலாம். பேந்தென்ன செய்யிறது.'

அம்மாவின் மனதில் நெருடல் தோன்றி விட்டதை உணர்ந்து கொண்ட நிர்மலா மௌனத்தைத் தழுவிக் கொண்டாள்.

அம்மாதான் என்ன செய்வாள்? இங்கிருந்து இடம் பெயர்ந்து போய் கிளிநொச்சி மகா வித்தியாலத்தில சில மாதங்கள் படித்துவிட்டுபின்னர் அங்கும் இருக்க முடியாத சூழ்நிலை உருவாக மாங்குளம் மகாவித்தியாலத்தில படிப்பைத் தொடர்ந்து அங்கேயே கா.பொ.த சதாரணதர பரீட்சைக்குத் தோற்றினாள் நிர்மலா.


ஆகக் குறைந்த அடிப்படை வசதியில் கொட்டில் வீட்டில் குப்பி விளக்கொளியில் நிலத்தில் குந்தியிருந்து படித்து நிர்மலா எட்டுப் பாடங்களிலுமே விசேட சித்தி பெற்று பாடசாலையில் முதலிடம் வகித்த போது .. .. .. அப்பாவினதும் அம்மாவினதும் மனங்கள் குளிர்ந்து போயின இடம் பெயர்ந்து வந்து அனுபவித்த இன்னல்கள் யாவும் ஒரு நொடியில் மறைந்துபோயின. ஆனந்த சாகரத்தில் மூழ்கி எழுந்தனர். மகளை நன்றாகப் படிக்க வைத்து ஒரு டாக்டராகப் பார்க்க வேண்டும் என தாகம் கொண்டனர் விளைவு.. ..

யாழ்ப்பாணம் திரும்ப வேண்டுமென அம்மா, அப்பாவை நச்சரிக்கத் தொடங்கினாள். முதலில் மறுத்தபோதும் பின்னர் இசைந்து விட்டார். எனவே மிகுந்த சிரமத்தின் மத்தியில் இங்கு வந்து சேர்ந்து விட்டார்கள்.

படிப்பில் கண்ணுங்கருத்துமாக இருந்த நிர்மலாவை அந்தச் சம்பவம் வெகுவாகப் பாதித்து விட்டது. அவள் சுமூக நிலைக்குத் திரும்ப சில நாட்கள் பிடித்தன எனினும் பெற்றோர் தன் மீது கொண்டிருக்கும் நம்பிக்கையை வீண் போக்க விருப்பமற்று வலுகட்டாயமாகத் தனது கவனத்தை கல்வியில் செலுத்தினாள்.

நாட்கள் நகர்ந்தன தவணைப் பரீட்சை நெருங்கிக் கொண்டிருந்தது. நிர்மலா அல்லும் பகலும் அயராது படித்தாள்.

ஒரு நாள் இரவு அவள் நீண்ட நேரம் விழித்திருந்து படித்துக்கொண்டிருந்தாள். அம்மா மகளுக்குத் துணையாக அவள் படித்துக் கொண்டிருந்த மேசைக்கு அருகில்



பாயை விரித்துப் படுத்திருந்தாள்.

கொக்கரக்கோ!.. .. ..

சாமக் கோழியின் அறைகூவல் அம்மாவின் செவிகளில் விழுந்தது. மகளைப் பார்த்து வாஞ்சையுடன் கூறினாள்.

'சாமமாய்ப் போச்சுது, நிர்மலா! இனி வந்து படுபிள்ளை நாளைக்கு எழும்பிப் படிக்கலாம்.

'அம்மா! இன்னும் கொஞ்சம் படிக்கக் கிடக்குது அதையும் படிச்சிட்டு வந்து படுக்கிறன்.

கெஞ்சிய மகளை மிஞ்சமனமின்றி காத்திருந்தாள், அம்மா மகளுக்குகல்வியில் உள்ள ஆர்வத்தையிட்டு அவளது மனம் பெருமிதமடைந்தது.

அவர்களுக்குச் சற்றுத் தொலைவில் அப்பா சயனத்தில் ஆழ்ந்திருந்தார். இனிய கனவொன்றில் சஞ்சரித்துக் கொண்டிருந்த அவரது முகத்தில் புன்னகை கொப்பழித்துக் கொண்டிருப்பதை எவரும் கவனித்திருக்க முடியாது. அவரது கனவுலகில் டாக்டர் நிர்மலா கையில் ஸ்டெதஸ் கோப்புடன் பவனி வந்து கொண்டிருந்தாள்.

எங்கும் நிசப்தம் நிலவிய அவ்வேளையில் நிர்மலாவுக்கு அலுப்புத் தட்டியது. கைகளை மேலே உயர்த்தி சோம்பல் முறித்துக் கொண்டவள். இயலுமானவரை வாயை அகலமாகத் திறந்து கொட்டாவியை வெளிப் படுத்தினாள். அவளது கண்கள் கொவ்வைப் பழமாகச் சிவந்திருந்தன. தனது கவனத்தை ஒரு நிலைப்படுத்தி மிகுதி வந்த சொற்ப பாடத்தையும் படிக்க முயற்சித்தாள்.

திடும்!.. திடும்!.. திடும்!..

திடீரென வீட்டைச் சுற்றிக் காலடி ஓசைகள் கேட்டன. கனவுலகில் களித்திருந்த அப்பாவும் நனவுலகில் காத்திருந்த அம்மாவும் ஏக காலத்தில் திடுக்கிட்டு எழும்பினர். நிர்மலா வெருண்டவளாய் ஓடிவந்து அம்மாவைக் கட்டிக்கொண்டாள். அப்பா காதைக் கூர்மையாக்கி ஓசைவரும் திசையை உன்னிப்பாகக் கவனித்தார்.

இதற்கிடையில் பட பட வென முன் கதவு தட்டப்பட்டது. அம்மாவினதும் நிர்மலாவினதும் இதயத் துடிப்புக்கள் சங்கமமாகி உரலொன்றில் இருவர் மாற்றுலக்கை போடுவது போன்ற ஓசையாய் அவர்களது உணர்வுக்குள் உறுத்தியது.

அப்பா எழுந்து போய் கதவைத் திறந்தார். அவரது கைகள் மட்டுமல்ல முழு உடம்பும் உதறலெடுத்தது.

கதவைத் திறந்ததுதான் தாமதம் திமுதிமுவென படையினர் வீட்டினுள் நுழைந்தனர். நிர்மலா நடுங்கியவாறு அம்மாவின் பின்னால் பதுங்கிக் கொண்டாள்.

வீட்டின் மூலை முடுக்கெல்லாம் துளாவிய பின் ஒருவன் மட்டும் அவர்களிடம் வந்தான். நிர்மலா கதிகலங்க நின்று கொண்டிருந்தாள். சற்றும் எதிர்பாராத வகையில் துப்பாக்கியை அவளது நெஞ்சுக்கு நேரே உயர்த்தியதும் நிர்மலா கண்களை இறுக மூடிக் கொண்டாள். இறைவனை நினைத்து இறுதி வணக்கம் செலுத்துவதைத் தவிர வேறு வழி இருப்பதாக அவளுக்குப் படவில்லை.

ஏய்!.. எல்.ரீ.ரீ இங்கு வந்தது தானே?

கண்களைத் திறந்து அவனை நோக்கினாள் அவள் விழிகள் இமைக்க மறுத்தன. தொண்டைக்குள் ஏதோ அடைத்துக் கொண்டது போன்ற பிரமை தலையை மட்டும் 'இல்லை' எனப் பொருள் பட ஆட்டினாள் அப்பா முன்வந்து அவனுக்குப் பதிலிறுத்தார்.

இங்கை ஒருத்தரும் வாறதில்லை

ஆத்திரமடைந்தவனாய் அவன் அப்பா பக்கம் திரும்பினான்.

அடோ நமக்குப் பொய் சொல்ல வாணாம் நாங்க இந்த ரோட்டில ரோந்து போனது இங்க லைற் தெரிஞ்சது. அது எப்பிடி? எல்.ரீ.ரீ க்கு சாப்பாடு குடுத்தது தானே

இதனைக் கேட்டதும் அம்மாவுக்கு எங்கையிருந்து தான் அத்தனை தைரியம் வந்ததோ தெரியவில்லை அவனைப் பார்த்து மளமளவென்று பொரிந்து தள்ளினாள்.

வெளிச்சம் தெரிஞ்சால் அது எல்.ரீ.ரீ. தான் வந்ததெண்டு அர்த்தமே எங்கட தேவையளுக்கு நாங்கள் விளக்குப் பாவிக்கிறதில்லையே அங்கை பார் மேசையை புத்தகம் விரிச்சபடி இருக்குது எங்கட பிள்ளை ரெஸ்றுக்கு படிச்சுக் கொண்டிருந்தது அதுக்கு இனி என்ன செய்யப் போறியள்?

அம்மா கையைக் காட்டிப் பேசியதும் அவன் சற்றுத் தணிந்து போனான் தடயங்கள் ஏதும் கிடைக்காத பட்சத்தில் தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டு அவர்கள் அனைவரும் வெளியேறினர்.

தடயம் ஏதும் கிடைத்திருந்தால் பதவி உயர்வும் சம்பள உயர்வும் கிடைத்திருக்குமே என்ற ஆதங்கம் அவர்களுக்கு நிர்மலா முற்றாக நிலை குலைந்து போனாள் அப்பா அம்மா மீது பாய்ந்தார்!

நான் சொன்னனான் அங்கையிருந்தே பிள்ளையைப் படிக்க வைக்கலாமெண்டு நீர் கேட்டீரே அங்கை படிக்கிற பிள்ளையளும் கம்பசுக்கு என்ரர் பண்ணுதுகள் தானே நீர் என்னடா என்றால் இங்கதான் ஏதோ பெரிசா ரீயூசன் இருக்குதென்று ஒற்றைக்காலில நிண்டு எங்களை கூட்டிக் கொண்டு வந்தீர் தேவையில்லாமல் வலியப் போய் முள்ளில சேலையை மாட்டிக் கொண்டம் இனி என்னண்டு விடுபடுறது?

அம்மா பதிலேதும் சொல்ல முடியாதவளாய் திருதிருவென முளித்தாள். பேசுவதற்கு திராணியற்றவளாய் நிர்மலா ஒரு கதிரையில் அமர்ந்து கொண்டாள். சாளரத்தினூடு அவளது பார்வை வெளியே திரும்பியது அங்கே பிறைச் சந்திரன் கருமுகில்களுக்குள் சிறைப்பட்டு தத்தளித்துக் கொண்டிருந்தான். எங்கும் கும்மிருள் கவ்வியிருந்தது. அவளது இதயத்திலும் இருள் சூழ்ந்து கொண்டது. விளக்கை அணைத்து விட்டு அனைவரும் படுத்துக் கொண்டனர். இதயப் படபடப்பு இன்னும் ஓய்ந்தபாடில்லை. இனம் தெரியாத குழப்பம் அங்கு நடந்து கொண்டிருந்தது. நிர்மலா இமைகளை இழுத்து மூடிக்கொண்டாள், நித்திராதேவி அவளை அணைக்க மறுத்து எட்டிப் போயினாள் மாசுகள் படிந்த காற்று அவளது சுவாசத்தை இறுக்கியது சுதந்திரக் காற்றைத் தேடி அவளது உணர்வுகள் உந்தத் தொடங்கின.

அவளையறியாமலே அவளது மனம் வன்னி மண்ணில் வாழ்ந்த வாழ்க்கையை எடை போட்டது. திறந்த குடிசைக்குள் நிம்மதியாக உறங்கிக் கழித்த நாட்களும் இரவென்றும்பகலென்றும் பாராமல் தெருக்களில் நடமாடித்திரிந்த பொழுதுகளும் அவளது நினைவை ஈர்த்தன.

சட்டென அன்று மாலை நடந்த சம்பவமொன்று அவளது நினைவில் நிலை கொள்ள எத்தனித்தது. நிர்மலா தினமும் ரியூசனுக்குப் போகும் போது ஆக்கரமிப்பாளர்களினது சோதனைச் சாவடிகளில் ஏற்படும் வேதனைகளைத் தவிர்க்குமுகமாக ஒழுங்கைகளினூடாகப் போய் வருவது வழக்கம் அன்று மாலையும் அதே வழியாக வந்து கொண்டிருந்தாள் சிறு சந்தியொன்றில் சில நாய்கள் கூட்டமாக நின்று கொண்டிருந்தன நிர்மலா அந்த இடத்தைத் தாண்டியதும் ஒரு நாய் உறுமியவாறே அவளைக் கலைக்கத் தொடங்கியது. அதன் பிடியிலிருந்து தப்புவதற்காக அவள் விரைவாக சைக்கிளை மிதிக்கத் தொடங்கினாள் நாயுமோ அவளை விட்டபாடில்லை. பின்னாலேயே வந்து கொண்டிருந்தது. அதன் வேகம் மட்டும் சற்றுக் குறைந்திருந்தது.

நிர்மலாவின் மூளையில் ஒரு பொறிதட்டியது ஒழுங்கையின் திருப்பத்தில் சட்டென சைக்கிளை நிறுத்தினாள் குனிந்து ஒரு கல்லை எடுத்து அதன் மீதுவீசினாள்.

'லொள்'!.. ..

கிறீச்சிட்டவாறு நாய் திருப்பி ஓடத் துவங்கியது. இந்த நினைவுகளை மீட்டவளது இதயத்தில் இதமான சுகம் தோன்றியது அப்படியே அயர்ந்து போனாள்.

டாங்!.. டாங்!!.. டாங்!!!..

அதிகாலை கோயில் மணியோசை அவளைத் தட்டியெழுப்பியது நிர்மலா எழுந்து வெளியே வந்தவள் கண்களை நிமிர்த்தி மேலே நோக்கினாள். கருமுகில்கள் கலைந்து நிர்மலமாய்க் கிடந்தது வானம் விடிவெள்ளி அங்கே காலித்திருந்தது. இனி விடியப் போகுது.

அவளது வாய் முணுமுணுத்தது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





## முதலாம் பாகம்
### அத்தியாயம் இருபத்தியேழு

**தொடர்ச்சி...**

வெற்றியின் உத்வேகத்திலும், பிரிட்டிஷாரின் வெளியேற்றும் கொள்கையை முறியடிக்க வேண்டும் என்னும் ஆவலினாலும், மொசாட் ஒரு முரட்டுத்தனமான திட்டத்தைத் தீட்டி அதை நிறைவேற்றப் பில் பிறையைத் தேர்ந்தெடுத்தனர்.

சட்டவிரோதக் குடியேற்றக் கப்பல் படையில் பெரியது அவனுடைய ஸ்டார் ஒவ் டேவிட்டாகும். கிட்டத்தட்ட இரண்டாயிரம் பயணிகளைக் கொண்டு சென்றது. மற்றைய கப்பல்கள் சில நூறு பேரிலிருந்து ஆயிரம் வரையானவர்களைக் கொண்டு சென்றன. ஐயாயிரம் பேருக்கு மேற்பட்ட அகதிகளோடு ஒரு கப்பலைத் தடையை மீறி அனுப்பினால் அது பிரிட்டிஷாருக்கு ஒரு மகத்தான தாக்கத்தை ஏற்படுத்தும் என மொசாட் கருதியது.






இந்த வேலையைச் செய்யக் கூடிய ஒரு கப்பலைத் தேடிப் பிடித்து, அதை மறுசீரமைத்துத் தென்பிரான்சில் இருந்த லாசியோடாட்டில் இருந்து ஐயாயிரம் அகதிகளை ஏற்றிச் செல்லும் பணிக்குப் பில்பிறை அமர்த்தப் பட்டான். பிரிட்டிஷாரின் சந்தேகத்திற்குட்படாத முறையிலே கப்பல் அமெரிக்காவிலோ, தென்னமெரிக்காவிலோ வாங்கப்பட வேண்டுமெனக் கருதப்பட்டது. பிரிட்டிஷ் புலனாய்வுத் துறையினர், ஐரோப்பிய துறைமுகங்களை மிக நன்றாகவே கண்காணித்து வந்தனர். மொசாட் முகவர்கள் தென்னமெரிக்கத் துறைமுகங்களில் கப்பல் ஒன்றைத் தேடிக் கொண்டிருந்த அதேநேரம், பில் பிறை தானே கிழக்குக் கரையோரங்களிலும், குடாத்துறை முகங்களிலும் தேடினான். அவர்கள் செலவழிக்கக் கூடியதாக இருந்த பணத்தில் நல்லதொரு கப்பலை வாங்க முடியாதென்பது நிச்சயமாயிற்று. பில், சூதாட்டத்தில் போல் ஒரு முடிவை எடுத்தான். அந்த முடிவு இப்போது கவலையைக் கொடுத்தது. பால்டிமோருக்கும் 'நோர்த்போல்'-குமிடையே, இரவில் மட்டும் செசாபீக்குடாவில் சேவையிலீடுபடுத்தப்பட்டிருந்த ஒரு வயது கூடிய, சேவையிலிருந்து அகற்றப்பட்ட பழைய நீராவிக் கப்பலொன்றை அவன் வாங்கியிருந்தான். ஜெனரல் ஸ்ரோன்வோல் ஜாக்சன் என்று அழைக்கப்பட்ட, வழமையான அளவைவிடப் பெரியதான ஒரு உல்லாசப் பயணக் கப்பலான அது, சமுத்திரத்தில் ஒருபோதும் சேவையிலீடுபடவில்லை. கப்பலைப்பற்றிக் கௌரவத்துடன் ஏதாவது கூறிக்கொள்ளக் கூடுமானால் அது மலிவான விலையில் வாங்கப் பட்டதைத்தான் குறிப்பிடலாம்.

வெள்ளைக் கோட்டணிந்த பணியாளன் அவன் தோளுக்கு மேலால், 'சவ்டரில் ஏதாவது பிரச்சினையா?' என்று கேட்டான்.

'இல்லையில்லை. அப்படி ஒன்றுமில்லை... அது நன்றாகத்தான் இருக்கிறது' என்று முணுமுணுத்துக்கொண்டே ஒரு கரண்டி நிறைந்த சூப்பை வாய்க்குள் தள்ளினான்.

விரிகுடா சேவையிலீடுபட்டிருந்த கப்பலை வாங்கியது தவறா? தற்சமயம் அது வேர்ஜீனியாவின், நியூபோட் நியுசில், 6850 அகதிகளை கொண்டு செல்லக்கூடிய விதத்தில் சீரமைக்கப்பட்டுக் கொண்டிருந்தது. பில் பெருமூச்சொன்றை வெளிவிட்டான். இந்த நிகழ்வுகளுக்கு இன்னொரு பக்கமும் இருந்தது. அவனால், 7000 அகதிகளை ஐரோப்பாவின் வெளியே ஒரே முறையில் கொண்டு போக முடிந்தால், பிரிட்டிஷ் கொள்கையை கிட்டத்தட்டச் சிதறடிக்கும் ஒரு காரியமாக அது இருக்கும்.

பில் சவ்டர் கோப்பையைத் தள்ளி வைத்துவிட்டு பில்லைக் கேட்டான். சாம்பல் கிண்ணத்திலிருந்த, அணைத்திருந்த தன் குறைச்சுருட்டை எடுத்துக் கொண்டு நியூபோட் நியுசில் இருந்து வந்திருந்த தந்தியைத் திரும்பவும் வாசித்தான். அது 'ஜாக்சன் ஆயத்தமாகி விட்டது' என்று கூறியது.

மறுநாள் நியூபோட் நியுசில், பலஸ்தீனியப் பால்மாக்குகள், அலியா பெற் அமெரிக்க யூதர்கள், அநுதாபம் கொண்ட ஸ்பானிய அரச விசுவாசிகள், இத்தாலியர்கள், பிரெஞ்சுக்காரர்கள் ஆகியோரைக் கொண்ட தன் மாலுமிகள் குழுவைக் கட்டியெடுத்துக்கொண்டான். அவன் கப்பலைப் பரிசோதித்துவிட்டு, விரிகுடாவின் கீழ்ப் பக்கத்தின் அருகோடு பரீட்சார்த்தமாக ஓட்டிப் பார்த்தான். பிறகு அதன் இயந்திரங்களை கூடுதல் வேகத்திற்குக் கொண்டுவந்து, அத்திலாந்திக் கடலை நோக்கி கப்பலைச் செலுத்தினான். மூன்று மணித்தியாலங்களுக்கிடையில், ஜாக்சன், இயந்திரக் கோளாறுகளுக்குள்ளாகி, திரும்பவும் நியூபோட் நியுஸ் துறைக்கு கொண்டு வரப்பட வேண்டியதாயிற்று.

அடுத்த இரு வாரங்களுள், பில், மேலும் மூன்று தரம் கப்பலை செலுத்திப் பார்க்க முயற்சித்தான். தான் வழமையாகச் சஞ்சரிக்கும் கடல் பகுதியை விட்டு சற்று அப்பால் போனதும், கப்பல் சண்டித்தனம் செய்யத் தொடங்கியதனால், ஒவ்வொரு முறையும் திரும்பவும் துறைமுகத்துக்கு எடுத்துச் செல்லப்பட வேண்டியதாயிற்று.

அலியா பெற் ஆட்களுக்கு, தான் இந்த இடத்தில் பிழை விட்டு விட்டதாக பில் அறிவித்தான். போகவேண்டிய பயணம், இக்கப்பலுக்கு முடியாத காரியம் என்றும் சொன்னான். எனினும் அலியா பெற்றை சேர்ந்தவர்கள், கப்பலைத் துறையில் வைத்து இன்னும் ஒரு வாரத்துக்கு செய்யக்கூடிய திருத்தங்களை, பரிசீலனைகளைச் செய்து கடைசி முறையாக ஒரு முயற்சி செய்து பார்க்குமாறு ஊக்கப்படுத்தினார்கள்.

ஐந்தாவது முயற்சியிலே, தனது முழு மாலுமிகள் குழுவும், தங்கள் மூச்சை இழுத்துப்பிடித்துக் கொண்டபடி ஆவலுடன் பார்த்துக் கொண்டிருக்க அந்தப் பழைய நீராவிக் கப்பல் கேப் ஹென்றியை ஹென்றி முனை கடந்து அத்திலாந்திற்குள் பிரவேசித்துத் தொடர்ந்து ஒரு பிரச்சினையுமில்லாமல் இயங்கிக் கொண்டிருந்தது.

இருபத்திரண்டு நாட்களுக்குப் பிறகு, ஸ்ரோன்வோல் ஜாக்சன் சிங்கங்களின் குடாவைக் கடந்து, லாசியோடாட்டின் பெரிய அகதிகள் முகாமிலிருந்து இருபதே மைல் தூரத்திலும், மார்செயில்சில் இருந்து நாற்பது மைல் தூரத்திலும் இருந்த ரூலோன் என்னும் பிரெஞ்சுத் துறைமுகத்தைச் சென்றடைந்தது.

பிரான்சில், லொறிச் சாரதிக

**லியோன் யூறிஸ்**

ளின் வேலை நிறுத்தம் ஒன்று நடந்து கொண்டிருந்ததால், பிரிட்டிஷ் புலனாய்வுத் துறையினர் சிறிது அசட்டையாக இருந்தனர். ஏனெனில், லொறிகள் இல்லாது அகதிகளை நகர்த்துதல் நடைபெறாது என அவர்கள் நினைத்தார்கள். இதைவிடவும், சில வாரங்களுக்கு முன் போர்ட்டுக்கு, டொவ்வுடன் வந்து சேர்ந்த கேற்ஸ் ஒவ் சியோன் கப்பலுக்குப் பிறகு கப்பலெதுவும் ஐரோப்பிய துறைமுகங்களிலிருந்து வந்து கொண்டிருப்பதாகத் தகவல் எதுவும் கிடைக்கவில்லை. ஆயினும் அவர்கள் போதியளவு விழிப்பாயிருக்கவில்லை.

ஜாக்சனைப் பற்றி முன்னறிவிப்பு எதுவும் அவர்களுக்குக் கிடைத்திருக்கவில்லை. ஏனெனில், அக்கப்பல், முற்றாக அமெரிக்கவிலேயே கொள்வனவு செய்யப்பட்டுத் திருத்தப்பட்டிருந்ததோடு, அன்றுவரை எந்த அலியா பெற் கப்பலும் அத்திலாந்திக்கில் செலுத்தப்படும் அளவுக்குப் பெரிதாக இருந்தது இல்லை. ரூலோனில், ஜாக்சன் வந்து சேரும் நாள் நெருங்கியபோது, அலியா பெற், பிரெஞ்சு வாகன சாரதிகள் சங்கத் தலைவரைச் சந்தித்து நிலைமையை விளக்கினர். வாகன சாரதிகள் சங்கத் தலைவர் இரகசியமான முறையிலே லொறிகளையும், சாரதிகளையும் சேர்த்து எடுத்து வழங்கினார். அவர்களோ தங்கள் வேலை நிறுத்தத்தின் நடுவிலும், லாசியோடாட்டிலிருந்து ரூலோனுக்கு டொவ் லன்டவ் உள்ளிட்ட ஆயிரத்தைநூறு அகதிகளைக் கொண்டு வந்து சேர்த்தனர்.

கடைசி நிமிடம், இந்த விடயம் பிரிட்டிஷ் புலனாய்வுத் துறைக்குத் தெரிந்துவிட, அவர்கள் ரூலோன் நோக்கிப் படையெடுத்தனர் அறிவுறுத்தல்களைத் தாங்கள் லன்டனில் இருந்து பெறும் வரை ஜாக்சனைத் தாமதப் படுத்தக் கோரித் துறைமுக அதிகாரிகளுக்கு நிறைய லஞ்சம் வழங்கினார்கள்.

மொசாட் அலியா பெற்றின் ஆட்கள், கப்பலைக் கடலுக்குள் செல்லவிட லஞ்சங்களை வழங்கினார்கள். 'வாக்களிக்கப்பட்ட பூமி' எனப்பெயர் மாற்றம் செய்யப்பட்ட 'ஜாக்சன்' தனது கொடிக் கம்ப உச்சியிலே சவால் விடுவது போல் நீல வெள்ளை நிறத்தில், ஸ்டார் ஒவ் டேவிட்டை ஏற்றியிருந்தது.

கடல்படை தலைமையகத்திலும் சதாம் ஹவுசிலும், வைற் ஹோலிலும், அவசரம் அவசரமான கூட்டங்கள் நடைபெற்றன. இந்த நிலைமைகளினால், பிரிட்டிஷ் கொள்கைக்கு ஏற்படும் பாதிப்புகள் தெளிவாகப் புரிந்ததால், 'வாக்களிக்கப்பட்ட பூமி'யை எப்படியாவது நிறுத்தியாக வேண்டியிருந்தது. பிரிட்டிஷார் பிரெஞ்சுக்காரர்களுக்குக் கோபமான பயமுறுத்தல்களை விடுத்தனர். பிரித்தானிய போர்க்கப்பல்கள் ரூலோனுக்கு வெளியே காத்து நின்றன. பதிலாக, 'வாக்களிக்கப்பட்ட பூமி'யைப் பிரான்ஸ் நாட்டினர் பயணம் செய்ய அனுமதித்தனர்.

**தொடரும்...**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இரு வாரத்துக்கு ஒருமுறை கடிதம் மூலம் சந்திப்போம்!

அன்புச் சகோதரமே!

*எங்கள் மக்களின் பிரச்சினையை உள்நாட்டுப்பிரச்சினை என சிறிலங்கா மூடிமறைக்க முடியாத நிலை வேகமாக வளர்ந்து வருகிறது. சமீபத்தில் இந்திய உப கண்டத்திற்கு விஜயம் செய்த அமெரிக்காவின் தெற்காசிய அலுவல்களுக்கான உதவி செயலர் திரு. கார்ல் இன்டர்பேர்த்ஸ் சிறிலங்காவில் வைத்து அரசியல் தீர்வின் தேவையை வற்புறுத்தி உள்ளார். அத்துடன் சர்வதேச மத்தியத்தின் முக்கியத்துவத்தையும் வலியுறுத்தியுள்ளார். இவை இரண்டுமே சிறிலங்காவின் ஜனாதிபதி சந்திரிகாவினதும் அவரின் காலை வலம்வரும் சிறிலங்காவின் வெளிவிவகார அமைச்சர் கதிர்காமரதும் இராணுவத் தீர்வு- உள்நாட்டுப்பிரச்சினை இதில் மூன்றாம் தரப்பு மத்தியத்தம் தேவையில்லை என்ற கொள்கைகளைத் தரைமட்டமாக்கியுள்ளது. எவ்வளவோ கோடிக்கணக்கான பணத்தை செலவழித்து இருவரும் கூடவே மற்றைய அமைச்சர்களும் தமிழ்க் குழுக்களும் உலகெல்லாம் வலம்வந்து செய்த சர்வதேச பொய்ப் பிரச்சாரங்கள் கலைந்து போவதை அமெரிக்க தெற்காசிய அலுவல்களுக்கான தெற்காசிய உதவி செயலரின் கூற்று தெளிவாக்கியுள்ளது.*

*இந்நிலையில் சந்திரிகா நரித்தனமும் தமிழர்கள் மேல் மனிதாய உணர்வுமற்ற தலைவர் என்ற வகையில் அரசியல் யதார்த்தத்தை ஏற்றுத் தனது தலைமையின் தவறான போக்கைத் திருத்திக்கொள்வதற்குப் பதிலாக ஏற்பட்டு வரும் சர்வதேச மாற்றங்களைத் தனக்கு சாதகமாகத் திசை திருப்புவதற்கு அல்லது போலித் தனமான அறிவிப்புக்களைச் செய்து சர்வதேச சிந்தனைகளை குழப்புவதற்கான சதித்திட்டம் ஒன்றை கதிர்காமரின் ஒக்ஸ்வேர்ட் மூளைப்பலத்துடன் தேடுவதிலேயே தன் கவனத்தைச் செலுத்துவார் என்பது அனைவரும் அறிந்த உண்மை. இந்நிலையில் சர்வதேசப் புலம்பெயர் தமிழீழ மக்களான நானும் நீயும் சர்வதேச மக்களுக்கு எமது மக்களின் பிரச்சினை குறித்த மிகத் தெளிவான விளக்கத்தைக் கொடுக்க வேண்டியவர்களாக உள்ளோம். ஏனெனில் ஒரு யுத்தத்தில் ஏற்படும் எவ்வித தலையீடுகளும் அந்த யுத்தத்தின் ஒரு பகுதியாகவே அமையும். எனவே தவறான தலையீடுகள் ஏற்படும் ஆயின் அவை யுத்தத்தின் நோக்கான உண்மையான விடுதலையை அடைய முடியாமல் செய்து விடும். சந்திரிகாவின் அடுத்த செயற்பாடுகள் இதற்கான வலைகளைப் பின்னுவதாகவே அமையும். இந்த வலைகளை கிழித் தெறிந்து எமது மக்களின் நியாயமான நீதியும் சத்தியமும் மிகுந்த போராட்டத்தினை வெற்றி நோக்கி வழிநடத்த வேண்டிய மிகப் பொறுப்பான காலகட்டத்தில் புலம் பெயர் தமிழர்களாகிய நாம் அனைவரும் இருக்கின்றோம். இதற்கு முதலில் நாம் நம் மக்களின் முதன்மைத் தேவை என்ன என மிகத் தெளிவாக விளக்க கூடிய ஆற்றலை வளர்த்துக் கொள்ள வேண்டும்.*

*எமது மக்களின் மிகமிக முக்கிய தேவை பாதுகாப்பு. இந்தப் பாதுகாப்புக்கான தேவையே எமது மக்களை ஆயதம் ஏந்திப் போராட வைத்துள்ளது. எமது மக்கள் தமது பாதுகாப்புக்காக கட்டி எழுப்பி நாளாந்தம் அவர்களின் உயிர்களுக்கு, உடலுக்கு, உடமைக்கு பாதுகாப்பை வழங்கும் மக்களின் அமைப்புத்தான் அவர்களின் தேசிய விடுதலை இயக்கமான தமிழீழ விடுதலைப் புலிகள். தமிழ் மக்களின் பாதுகாப்பை உடைத்தெறிவதற்காகவே தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை அழிக்க வேண்டுமென்னும் பகற்கனவில் சிங்கள பௌத்த பேரினவாதம் தமிழ் மக்கள் மீதான யுத்தம் ஒன்றை நடாத்தி வருகிறது. சிறிலங்காவைப் பொறுத்த வரை அவர்களின் யுத்தத்தின் நோக்கு தமிழ் மக்களின் பாதுகாப்பு வலிமையை அழித்து அவர்களின் அரசியல் பணிவை ஆயுத முனையில் பெற்று தமது ஆக்கிரமிப்பை இறைமையாக அவர்களின் மேல் திணிக்க வேண்டும் என்பதேயாகும். இதனால் தமிழ் மக்களின் அதிமுக்கிய தேவை அவர்களின் பாதுகாப்பை உறுதி செய்து கொள்வதாக உள்ளது. இந்நிலையில் தமிழ் மக்களது குடிமனைகள் கோயில்கள் பள்ளிகள் வைத்தியசாலைகள் எங்கும் நிறைந்து நிற்கும் சிங்களப் படைகளை விலகச் செய்வதன் மூலமே தமிழ் மக்கள் தங்கள் நாளாந்த வாழ்வை தக்க வைத்துக் கொள்ளலாம். இது நிபந்தனையல்ல. மக்கள் உயிர் வாழ்வதற்கான நாளாந்தக் கடமைகளைச் செய்வதற்கான அடிப்படைத் தேவை. இதற்கு சர்வதேச சமுகம் தன் அழுத்தங்களை சிறிலங்கா மேல் பிரயோகிக்கும் பொழுது அமைதிப் பேச்சுவார்த்தைக்கான சூழல் தானாகவே தோன்றும்.*

*அவ்வாறே தமிழ் மக்கள் தாம் தமது தேசிய விடுதலை இயக்கத்தைக் கொண்டு விடுவித்த பகுதிகளில் விரும்பி வாழ்வதை சீர்குலைக்கும் நோக்கில்-ஜனநாயகத்தின் அடிப்படையான மக்கள் விருப்பு என்பதை தமிழ் மக்கள் பிரயோகிப்பதைத் தடுக்கும் நோக்கில் தமிழீழ விடுதலைப் புலிகளினால் விடுவிக்கப்பட்ட பகுதிகளில் வாழும் மக்களுக்கு உணவு மருந்து போன்ற உயிர்வாழ்தலுக்கு அடிப்படை வசதிகளைச் சிறிலங்கா தடை செய்து சர்வதேச யுத்தக் குற்றம் செய்து நிற்கிறது. இதனை சர்வதேச சமுகத்தைக் கவனத்தில் எடுக்க வைத்து அப் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவு மருந்து போன்ற அடிப்படை உதவிகள் கிடைக்க வழி வகுக்க வேண்டியது ஐக்கிய நாடுகள் சபையின் கடமையாக உள்ளது.*

*மற்றைய விடுதலை இயக்கங்களுக்கு (சமீபத்திய உதாரணம் பலஸ்தீனிய விடுதலை இயக்கம்) செய்தது போல் பாதிக்கப்பட்ட மக்களது சார்பாக அவர்களது சுய நிர்ணய உரிமைப் போராட்டத்தை முன்னெடுக்கும் இயக்கமான தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு சர்வதேச நிறுவனங்களிலும் அரசசார்பற்ற அரங்கங்களிலும் தமது மக்களின் துன்பங்களை எடுத்துரைத்து அவர்களுக்கு உரிய நிவாரணம் ஏற்பட வழிசெய்யுமாறு கோர சந்தர்ப்பம் கொடுத்தல் அவசியம்.*

*இவற்றுக்கு உதவுமாறு நாம் சர்வதேச உலகையும் இப்பிரச்சினையில் அக்கறை உள்ள நாடுகளையும் நாம் வாழும் நாடுகளின் அரசாங்கங்களையும் அமைப்புக்களையும் கேட்போமானால் சர்வதேச தலையீடுகள் சரியான முறையில் இடம்பெற உதவியவர்களாவோம். சந்திரிகா பின்னமுயற்சிக்கும் எந்த சதிவலைக்கும் அவர்களது சர்வதேச பிரச்சாரத்திற்கு ஏற்பட்ட பரிதாப நிலையே ஏற்படும்.*

**அன்பின் ஆசிரியர்**
**(22.02.1999)**

3ம் பக்கத் தொடர்ச்சி


## ஜனநாயக விபச்சாரம்

அவப்பெயர் சரித்திரத்தையா சந்திரிகா தேர்ந்து எடுத்து தனது பிள்ளைகளுக்கும் பேரப்பிள்ளைகளுக்கும் விட்டுச் செல்லப்போகின்றார். லேடி மக்பெத்? அவளது கையில் இருந்த ரத்தக் கறையை பார்த்து ஓ இரத்தக் கறையே அகன்று போ என மனச்சோர்வுடன் சத்தம் இட்டதையும் அது அகலாது அவளின் இறுதிக்காலத்தில் அவளை வாட்டி வதைத்ததையும் லேடி மக்பெத் சேக்ஸ்பியர் நாடகம் படித்தவர்கள் அறிவர். போலித்தனமான தேர்தல் ஒன்றை முறைமையான தேர்தல் எனக் கையொப்பமிட்ட சந்திரிகாவின் கையும் அழிக்கப்பட முடியாத கறை படிந்த கையாயிற்று. மனித நாகரிகத்தின் முன் அவமானத்திற்குரிய ஒருவராக அவர் தன்னை மாற்றிக் கொண்டார். அவருடைய எல்லாவிதமான சமாதான கோலத்தினையும் மாற்றி மிகுந்த கேவலமான வடிவம் ஒன்றை இது அவருக்கு கொடுத்து விட்டது.

அந்த 1993 வைகாசி 1ம் நாள் றோஸ்மண்ட் பிளேசில் மே தின ஊர்வலத்திற்குப் புறப்பட ஆயத்தமாகிக் கொண்டிருந்த சந்திரிகாவுக்கும் அவருடைய தாயாருக்கும் பிரேமதாசா கிராண்ட்பாஸில் குண்டு வெடிப்புக்குள் சிக்கிய செய்தி கிடைத்தது. சிறிது நேரம் பிரேமதாசாவிற்கு என்ன நடந்தது என்ற கேள்வி நிலவியது. பிரேமதாசா கொல்லப்பட்ட செய்தி உறுதியானதும் அதில் மகிழ்ந்த முதல் நபரான சந்திரிகா நாம் ஒரு போத்தல் சம்பெயின் உடைக்க வேண்டும் எனத் தன்னைச் சுற்றி நின்ற உயர்குழாத்து மனிதர்களையும் பாராது கூறினார். ஆனால் தாயார் நிலைமையைச் சமாளித்து அசட்டுக் கதை கதைக்காதே என முணுமுணுத்தார். சிறிது நேரத்தில் சர்வாதிகாரி ஒருவர் ஒழிந்து போனதாக மகிழ்ந்த பலர் நாடெங்கும் பட்டாசு வெடித்தனர். ஆனால் அவரும் ஜனநாயகத்தின் வழி தேர்தலில் வென்று ஆட்சி நடத்திய ஒருவர். ஆனால் இன்று சந்திரிகாவையும் ஊழல்கள் நிறைந்த சர்வாதிகாரப் போக்குள்ள ஒருவராகவே ஒருவர் மதிப்பீடு செய்வார். வாக்குரிமையை ஆயுதத்தினால் தடுக்கையில் எதிர்க் கட்சியுடன் அல்ல மக்களுடனேயே சந்திரிகா சவால் விடுகின்றார். அரச சார்பான சமுக தொடர்பு சாதனங்களின் அலறல்களை விட மற்ற எல்லா மக்களுமே வயம்பா தேர்தல் சமைக்கப்பட்ட ஒன்று என்றே உரத்துக் கூறுகின்றனர். தபால் வாக்குகளில் மக்கள் ஐக்கிய முன்னணி தோல்வி. இந்த தபால் வாக்குகளுக்கும் அளிக்கப்பட்ட வாக்குகளுக்குமிடையிலான கிரகிக்க முடியாத இடைவெளி தேர்தலின் நேர்மையீனத்தை தெளிவாக்கி நிற்கிறது. ஆனால் 1994ல் சந்திரிகாவை பதவிக்குக் கொண்டு வந்த தேர்தலில் தபால் வாக்குகளது முடிபுக்கும் அளிக்கப்பட்ட வாக்குகளது முடிபுக்கும் அதிக வித்தியாசம் இருக்கவில்லை. இது தேர்தலின் நேர்மையினை உறுதிபடுத்தியது. சந்திரிகா இன்று தேச மக்கள் மட்டுமல்ல அவரது பொது நிர்வாகத் துறையும் அவரின் தேர்தல் நேர்மையீனத்தை வெளிப்படுத்தி நிற்கிறது என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

ஆயுதத்தைக் கொண்டு தேசத்தை ஆள முற்படுவது அபாயகரமான ஒன்று. இது சந்திரிகாவுக்கு நன்மை செய்யாது என்பது மட்டுமல்ல மக்களுடைய ஆத்திரத்தை அவருக்கு எதிராக கிளறி விடும். இவ்வாறான போக்கில் மக்கள் ஐக்கிய முன்னணி எதிர் கொள்ளவுள்ள ஐந்து மாகாணசபைத் தோதல்களிலும் வெற்றி பெறும் என்னும் நம்பிக்கை குறைந்து வருகிறது.

**பிரேமதாசா கிராண்ட்பாஸில் குண்டு வெடிப்புக்குள் சிக்கிய செய்தி கிடைத்தது. சிறிது நேரம் பிரேமதாசாவிற்கு என்ன நடந்தது என்ற கேள்வி நிலவியது. பிரேமதாசா கொல்லப்பட்ட செய்தி உறுதியா னதும் அதில் மகிழ்ந்த முதல் நபரான சந்திரிகா நாம் ஒரு போத்தல் சம்பெயின் உடைக்க வேண்டும் எனத் தன்னைச் சுற்றி நின்ற உயர்குழாத்து மனிதர்களையும் பாராது கூறினார்.**



வயம்பா தேர்தல் ஊழல்கள் தற்செயலாக நடந்தவையல்ல. உயர் மட்டத்தில் திட்டமிடப்பட்ட ஒன்று. குருநாகல பொலிஸ் பிரிவில் இருந்த 40 பொலிசாரை இடம்மாற்றி அவர்களின் இடத்திற்கு சந்திரிகா அரசாங்கத்தின் கையாட்களை நியமித்ததன் மூலம் ஊழல்களுக்கான அத்திவாரம் பலமாக இடப்பட்டது. முப்படைகளின் தலைமைத் தளபதி என்ற வகையில் பொலிசாருக்கும் பொறுப்பாக உள்ள சந்திரிகா ஜனவரி 25ம் திகதிய நாளின் நகல அவமானங்களுக்கும் பொறுப்பாளியாகின்றார்.

ஆளுங்கட்சி தான் இப்படி என்றால் இச்சம்பவங்கள் குறித்து எதிர்க் கட்சியின் நிலையென்ன? உண்மையில் எதிர்க்கட்சி வயம்பா சம்பவங்களை மக்கள் முன் எடுத்து விளக்குவதிலும் அதனைக் கண்டிப்பதிலும் போதிய அக்கறை காட்டவில்லை. எல்லாமே மந்த கெதியில் நடாத்தப்பட்டன. உண்மையில் சுப்றீம் கோர்ட்டு நீதித்தீர்ப்பு கூட சமுகத் தொடர்பு சாதனங்களின் பெருமுயற்சியினால் எய்தப்பட்ட ஒன்று என்பதே உண்மை. ஆயினும் எதிர்க் கட்சிக்கு இது வானில் இருந்து பொழியப்பட்ட அப்பமாக உள்ளது. ஒவ்வொவருக்கும் தெரியும் எங்கள் சிங்கள இளைஞர்கள் இரு முறை அரசாங்கத்திற்கு எதிராக ஆயதம் ஏந்திப்போராட வேண்டி நேரிட்டது. இரு தடவையும் ஜனநாயகத்தைக் காப்பாற்றல் என்ற போர்வையில் அவர்கள் நரவேட்டையாடப்பட்டு ஈவிரக்கமற்ற முறையில் அப்புரட்சிகள் ஒடுக்கப்பட்டன. ஆனால் அன்று ஜே.வி.பி துப்பாக்கி முனையில் அடைய நினைத்ததை இன்று மக்கள் ஐக்கிய முன்னணி ஆயுதக்காடையர்கள் கொண்டு சாதிக்க நினைக்கிறது. ஆதலால் இருவருக்கும் வேற்றுமையிருப்பதாக தெரியவில்லை. அவர்கள் படித்த பாடத்தை இவர்களும் படிக்கும் நாள் துூரத்தில் இல்லை. சந்திரிகாவின் பெருமைகள் எல்லாம் காற்றில் பறந்து கொண்டிருக்கின்றன. அவருடைய பெருமைகள் மட்டுமல்ல தேசத்தின் கலாச்சாரம் ஜனநாயகமும் பாரம்பரியமும் காற்றில் பறக்கினறன. இதற்கான பிராயசித்தத்தினை சந்திரிகா செலுத்தியே ஆக வேண்டும். அந்நேரத்தில் சந்திரிகாவுக்கு இரக்கம் கிடைக்க வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றோம்.

♦♦

www.tamilarangam.net



# போராளியின் படைப்பு

## பதிலென்ன சொல்வது




விடுமுறையில் நான் வீட்டுக்குப் போயிருந்தேன்
என்னைக் கண்டதும் அம்மாவிற்கு தாளாத மகிழ்ச்சி
தடல் புடலாகச் சமையல் செய்து
ஆசையாய் அம்மா சாப்பிட அழைத்தாள்
அரையல், துவையல், பொரியல், வறுவல் என
அம்மா தன் கைவண்ணத்தை
அழகாகவே காட்டியிருந்தாள்.
முதற் கவளமே தொண்டையில் சிக்கியது
சமைத்தால் புகை தெரியும்
பொரித்தால் மணம் புரியும் என
காட்டுக்குள் நம்மவர்கள் படுகின்ற கடுந்துயரை
அம்மா அறிய மாட்டாள்,
பொருட்கள் பெறுகின்ற சிரமம் காரணமாய்
மண்ணெண்ணையில் தோய்ந்த பருப்பை மட்டும்
மாதக்கணக்கில் சாப்பிட்டதையோ
அன்றி, அரிசி அவித்த கஞ்சியை வடித்து
அதிலே பருப்பை ஆக்கி உண்டதையோ
நான்கு கிறீம் கிறேக்கறும் அரைக்கப் நீருமாய்
எம் நாட்கள் நகர்ந்ததையோ
என் அம்மா அறிந்திருக்க நியாயமில்லை.
இதோ இப்போது கூட
எத்தனையோ புலிவீரர் எவ்வளவோ காரணங்களால்
ஒருவேளை? இருவேளை? சிலவேளை? பலவேளை
பட்டினியாய்க் கிடக்கக் கூடும்.
இங்கோ எனக்கு அம்மா
எல்லாமே பார்த்துப் பார்த்து
ஆக்கி வைத்திருப்பதைக் காண
கண்களிரண்டினிலும் நீர் நிறைகின்றது.
கலங்கிய விழிகளைக் கண்டு பதறிப் போய்
சரியா உறைக்குதா ? என்றன்னை கேட்கின்றாள்.
இதற்கு என்னால் என்ன சொல்லவியலும்?

சோழநிலா

## நட்பின் ஏக்கம்

அன்றொரு நாள் நள்ளிரா வேளை – நான்



ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த நேரம்
எங்கேயோ யாரோ மௌனமாய் விசும்பும் ஒலி,
திடுக்குற்றெழுந்தேன் – பக்கத்தே
என் உயிரை விட மேலாய் நான் நேசிக்கும்
என் இனிய தோழன்
கண்ணீரில் நனைந்து துயரில் வெந்து
துடி துடித்துக் கொண்டிருந்தான்.
என்னவனே.... என்னவனே..
ஏனழுதாய் எனக்கேட்டேன்,
என் அன்பே, ஆருயிரே,
எத்தனை செருக்களங்களை நான் கண்டவன்,
எத்தனை எத்தனை வீரர்
என்னை அரவணைத்தனர் – ஆனால்
அணைத்தவர் எல்லாம் இன்று
மண்ணிற்கு விதையாகிப் போனார்.
இப்போது நீ..., நாளை...? என்னவனே,
ஒன்றைப் புரிந்து கொள். விடுதலை வீரரெல்லாம்
மரணத்தை மடியில் சுமப்பவர்
சாவுக்கு அஞ்சார், விலை கொடுத்து
வாங்கிட முடியாத விடுதலையை,
உயிர் விலை கொடுத்து வாங்கிடத் துடிக்கும் வீரர்,
வெற்றியின் போது வீழ்வதும் நியதிதானே,
நாளை நானும் வீழலாம் ....
ஆனால், உன்னை அரவணைக்க,
இன்னோர் புதுக்கரம் வரும்
அஞ்சாதே என்று தேற்றினேன்,
உண்மையை புரிந்ததனால்
உள்ளக் குமுறலை அடக்கி
மெல்ல உறங்கிக் கொண்டது
என் துப்பாக்கி.

பிரமிளா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்